வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 22.01.2024 திங்கட்கிழமை இதழ் : 22 பக்கங்கள் : 12

# இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவு!

- திருமலையிலிருந்து பி. சுலக்சன், பா. விபூசன் -



திருகோணமலை, ஜனவரி 22

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக சிவ ஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அந்தக் கட்சியின் தலைமை பதவிக்காக நேற்று நடத்தப்பட்ட வாக் கெடுப்பில் 184 வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ம. ஆ. சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி தனது கட்சியின் தலைவரை தெரிவு செய் வதற்கான தேர்தலை நேற்று ஞாயிற்றுக் கிழமை நடத்தியது. திரு கோணமலை நகர மண்டபத்தில் இரகசிய வாக்கெடுப்பு முறையில் நடந்த இந்தத் தேர்தலில் வாக்களிக்க 321 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங் கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் இதில் பங்கேற்கவில்லை. இதனால், அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக 8 பேர் கொண்ட குழுவை அமைத்திருந்தார். 11

## தேசியத்தின் இருப்புக்காக ஒன்றாக செயல்படுவோம்!

தமிழரசு கட்சியின் புதிய தலைவர்

திருகோணமலை, ஜன. 22

என்னுடன் போட்டியிட்ட எம். ஏ. சுமந்திரன் சீ. யோகேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து எமது மக்களின் உரிமைக்காக - தேசிய இருப்புக்காக - தேசி யத்தின் ஒவ்வோர் அங்குலத்துக்காகவும் தொடர்ந்து பொறுப்போடும் கடமை உணர்வுடனும் செயல்படு வோம்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கான தேர்தல் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், என்னை தெரிவு செய்வதற்கு காரணமாக இருந்த இயற்கை என்னும் 11

## தலைவர் சிறீதரனுடன் சேர்ந்து பயணிப்பேன்!

தோல்வியின் பின் சுமந்திரன் தெரிவிப்பு

திருகோணமலை, ஜன. 22

தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய் யப்பட்ட சிறீதரனுக்கு முழுமையான ஆதரவை வழங்கி - அவருடன் சேர்ந்து பயணிப்பேன் என்று அவருடன் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி யடைந்த ம. ஆ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் 17ஆவது பொதுக்கூட் டமும் தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவும் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. இதில், தன்னை எதிர்த்து போட்டியிட்ட 11

## தமிழரசு தலைவருக்கான தேர்தல்; வாக்களிக்க 13 பேருக்கு மறுப்பு!

மட்டு. மாவட்ட மகளிர் தலைவி சாடல்

திருகோணமலை, ஜன. 22

இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை பதவிகான தேர்தலில் வாக்களிக்க 13 பேருக்கு எமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் நாங்கள் ஏமாற்றத்து டன் திரும்பினோம் என்று மட்டக்களப்பு மாவட்ட மக ளிர் அணி செயலாளர் ரஜனி ஜெயபிரகாஸ் தெரிவித் தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவரை தேர்வு செய்யும் தேர்தல் திருகோணமலையில் நேற்று ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது. இந்தத் தேர்தலில் 321 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத் தைச் சேர்ந்த 50 பேரில் 13 பேருக்கு வாக்களிக்கும் 11



## 5 ஆண்டுகளுக்குள் பலஸ்தீன அரசு!

இலங்கையின் முன்மொழிவு இதுவே என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஜன. 22

ஐந்து வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவு வதே இலங்கையின் முன்மொழிவாக உள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரி மைகளை பாதுகாக்க வேண்டும். சுயாதீனமா னதும் - சுதந்திரமானதுமான உரிமைகளைப் பறிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். 11

## அதிக போதைப்பொருள் நுகர்வால் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 22

சிறையில் இருந்து வெளிவந்த மகிழ்ச்சியை கொண் டாடுவதற்காக ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவில் நுகர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் நேற்று முன்தினம் இரவு தென்ம ராட்சி - சாவகச்சேரி - மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்தவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப்பொருள் வழக்கு ஒன்றில் கைது செய் யப்பட்டார். இந்நிலையில், அவர் கடந்த வெள் ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார். 11

## ஈஸ்டர் தாக்குதலில் பலியானோர் புனிதர்களாக அறிவிக்கப்படுவர்

கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜன. 22

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இறந்தவர்களை புனிதர் களாக கத்தோலிக்க திருச்சபை அறிவிக்கவுள்ளது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித் துள்ளார்.

கந்தானை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடை பெற்ற ஆராதனையின்போது பேசிய கர்தினால்,

இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவுதினத்தை நாடு அனுஷ்டிக்கும் 11

## வித்தியா கொலை வழக்கு: மரண தண்டனை கைதிகளின் மனுக்கள் மீது இன்று விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 22

மாணவி வித்தியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட் டவர்களின் மேன்முறை யீடுகள் இன்று திங்கட் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளது.

இந்த மேன்முறை யீட்டு மனுக்கள் ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதி மன்ற நீதியரசர்கள் ஆயத் தின் முன்னிலையில் கடந்த 09 ஆம் திகதி அழைக்கப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகளை சட்டமா அதி பரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு மனுதாரர்களுக்கு உயர்நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

இதனையடுத்து, மேன்முறையீட்டு 11

## ஊஞ்சல் சிறுவனுக்கு எமனானது

முல்லைத்தீவு, ஜன. 22

ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த சிறுவ னின் கழுத்தை கயிறு இறுக்கியதில் அவர் பரி தாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - செம் மலையில் நேற்று முன்தினம் மாலை இடம் 11

## பொருளாதார நெருக்கடியால் வேலையின்மை 5.2 வீதம் உயர்வு

கொழும்பு, ஜன. 22

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நாட்டில் வேலை இன்மை விகிதம் 5. 2 சதவீதமாக அதி கரித்துள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங் கையில் வேலையின்மை விகிதம் 4.7 சதவீதமாக இருந்த நிலை யில், இரண்டாவது காலாண்டில் 11

## இப்படியும் நடக்கிறது

கிரிக்கெட் உலகில் சச்சின் டெண்டுல்கர் ஒரு மிகச்சிறந்த வீரர். அவர் செய்த சாதனைகளை எப்போதுமே முறியடிப்பது சிரமமானது என்பார்கள். ஆனால், அத்தகைய சச்சின் டெண்டுல்கரும் சில இளம் வயது வீரர்களின் தலைமையின் கீழ் விளையாடியிருக்கிறார். அப்படி அவர் விளையாடியதால் அவர் சிறுமைப்பட்டு விடவில்லை. மாறாக மற்றைய வர் மனங்களில் உயர்ந்தே நின்றார்.

இதேபோலத்தான் நமது முத்தையா முரளிதரனும் - அவரின் வாழ்க்கை வரலாற்றை அண்மையில் திரைப்படமாக தயாரித்திருந்தனர்.

அந்தத் திரைப்படத்தை பார்த்தபோதுதான் முரளி எத்தனை தடைகளைத் தாண்டி இந்த நிலைக்கு வந்தார் என்பது தெரிந்தது.

தன் கிரிக்கெட் வாழ்வில் எப்போதும் ஒரு சிறந்த பந்து வீச்சாளராகவே வலம் வந்தவர் அவர். ஆனால், ஆரம்பத்தில் அவரை ஒரு கட்டத்தில் துடுப்பாட்டத்துக்கு தெரிவுசெய்த போது அவர் துவண்டு போய் விடுவார்.

அதாவது ஒருவர் எந்தத் துறையில் சிறந்து விளங்குகின்றாரோ அந்தத்துறையில் அவரை பயன்படுத்துவதுதான் சிறந்த தலைவனுக்கு உரிய பண்பு. இங்கே இவற்றை எதற்காக எழுதுகின்றேன் என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கான உட்கட்சி தேர்தல் நேற்று பரபரப்பாக நடந்து முடிந்திருக்கின்றது. அந்த தேர்தலில் சிவஞானம் சிறீதரன் வெற்றி பெற்றிருக்கிறார். இது, இந்த ஊர்க்குருவியைப் பொறுத்தவரை எதிர்பார்த்தது தான். அதில், ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

ஆனால், இந்தப் போட்டி தொடர்பாக சில வாரங்களுக்கு முன்னர் தலைவர் போட்டியில் இருந்த சுமந்திரன் ஒரு கருத்தை ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

"இன்று தமிழரசு கட்சியில் தலைவர் பதவிக்கு பலர் பெயர்கள் முன்மொழியப்படுகின்றன என்றால், அது அந்தக் கட்சியில் தலைவர் பதவிக்கு தகுதியானவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று அர்த்தம். மற்றைய கட்சிகளில்போல வாழ்நாள் தலைவர்களாக தலைவர்களை வைத்திருப்பவர்கள் அல்ல நாங்கள். எங்கள் கட்சி உட்கட்சி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட கட்சி - நாங்கள் ஜனநாயக முறைப்படி எங்கள் தலைவரைத் தெரிவுசெய்வோம் என்றவர், தேர்தல் முடிந்த பின்னரும் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக கட்சிப் பணியாற்றுவோம்" - என்றார்.

சச்சின் டெண்டுல்கர் சில இளம் வீரர்களின் தலைமையின் கீழ் விளையாடியிருந்தாலும், அவர்களும் ஏதோ ஒரு வகையில் திறமை இருந்த காரணத்தால்தான் தலைமைப் பதவிக்கு வந்தவர்கள் என்பதை சச்சின் உணர்ந்துகொண்டதுபோல, எல்லோரும் இனி சேர்ந்து விளையாடினால்தான் எந்தப் போட்டியிலும் ஜெயிக்க முடியும்.

தமிழரசு கட்சி என்பதை ஒரு கிரிக்கெட் கோஷ்டியைப்போல விமர்சிப்பதாக எண்ணிவிடுவது தவறானது. தமிழரசு கட்சி என்பது தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற சக்திகளில் முக்கியமானது. அது ஒரு கிரிக்கெட் அணி தனது இலக்கை வெற்றிபெறவேண்டும் என்பதற்காக எவ்வாறு அதில், இடம்பெற்றுள்ள வீரர்கள் அனைவரும் ஒற்றுமையாக கூட்டாக விளையாடி வெற்றிபெறுகின்றார்களோ அதேபோல தமிழரசு கட்சியிலுள்ளவர்களும் ஒற்றுமையாக பணியாற்றினால்தான் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கான நம்பிக்கை பிறக்கும்.

சுமந்திரன் சொன்னதுபோல தமிழரசு கட்சியில் தலைவர் பதவிக்கு பொருத்தமானவர்கள் பலர் இருந்தாலும், அவர்களில் ஒருவர் சிறந்த 'பந்துவீச்சாளராக' இருப்பார். ஒருவர் சிறந்த 'துடுப்பாட்ட வீரராக' இருப்பார். ஏன் இன்னும் ஒருவர் சிறந்த 'சகலதுறை வீரராக' கூட இருக்கலாம்.

ஆனால், எல்லோரும் சேர்ந்து விளையாடினால்தான் வெற்றி பெறமுடியும்.

தமிழரசு கட்சியின் வெற்றி என்பது யார் தலைவராவது என்பதில் உள்ள வெற்றி அல்ல. தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதில் அடைகின்ற வெற்றியே உண்மையான வெற்றியாக இருக்கும்.

தேர்தல் என்றாலே வாக்குறுதிகளும் இருக்கவே செய்யும். தேர்தலுக்கு முதல்நாளன்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்திருந்த சிறீதரன், 'தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும் இறைமையைக் காப்பதற்கான இந்த அரசியல் பணியிலே நாங்கள் மூன்று பேர் போட்டியிடுகிறோம். எங்கள் இனத்தின் விடுதலைக்காவும் அடுத்த சந்ததிக்கு எமது இன விடுதலையைக் கடத்திச் செல்வதற்காகவும் நடக்கும் இந்த தேர்தலில் நான் வெற்றி பெற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்' என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை தமிழரசின் பொதுச் சபை உறுப்பினர்கள் பெரும்பான்மையாக ஏற்றுக்கொண்டிருப்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அந்த உறுதிமொழிகளை காப்பாற்றுவதற்கு அவர் உழைக்கவேண்டுமே தவிர, தனக்கு ஆதரவானவர்கள் - எதிரானவர்கள் என்று பார்த்து அரசியல் செய்யாமல், அல்லது தனக்கு ஆதரவளித்தவர்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காமல் அனைவரையும் அனுசரித்து செல்லவேண்டும். அதுவே கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லது.!

**- ஊர்க்குருவி.**

# ரணிலை வெற்றி பெற வைப்பதற்காக பெரமுன கட்சி வேட்பாளரை நிறுத்தாது

## பிரபல ஆங்கில வார இதழ் தகவல்



கொழும்பு, ஜன. 22

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவதில்லை என சிறீலங்கா பொது ஜன பெரமுன தீர்மானித்துள்ளது என தெரிவித்துள்ள கொழும்பின் பிரபல ஆங்கில வார இதழ் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கியை அதிகரிப்பதே இதன் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து நேற்று வெளியான அந்தப் பத்திரிகையின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த விடயங்களுக்கு அப்பால் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ புதிய நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார். நாங்கள் இன்னமும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் குறித்து தீர்மானிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 14ஆம் திகதி நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சிறீலங்கா பொதுஜனபெரமுன தனது வேட்பாளரை நிறுத்த வேண்டுமா என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் முக்கியமாக தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தில் மிக முக்கியமான விடயங்களை மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

முதலாவதாக தம்மிக பெரேரா உட்பட நான்கு வேட்பாளர்கள் குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்த கருத்துகள் தற்போது செல்லுபடியற்றவையாகி விட்டன என்பதை மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்னமும் தெளிவாக தெரிவிப்பதென்றால் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் நிலைப்பாட்டுக்கு மாறாக மகிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார் என தெரிவிப்பது பிழையில்லை. இந்த மாற்றம் ஏன் ஏற்பட்டது? குறிப்பாக ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னதாக இந்த மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது?

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக விடயங்கள்குறித்து நன்கு அறிந்த இரண்டு தரப்புகள் தெரிவித்துள்ளன.

தற்போதைய நிலைப்பாடு என்னவென்றால் கட்சி ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்தாது என்பதே என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கியை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த யோசனை காணப்படுகின்றது.

இதன் காரணமாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிர்பாராத நன்மை ஒன்றும் கிட்டலாம் கட்சியிலிருந்து சிலர் வெளியேறியுள்ள நிலையில் ஏனையவர்களை தொடர்ந்தும் தக்கவைக்கலாம்.

மேலும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணியில் இணைவதை இது தடுக்கும். இவ்வாறான சூழ்நிலையில் ஏன் சிறீலங்கா பொதுஜன பெரமுனவினால் ரணில் விக்கிரமசிங்க என்ற வேட்பாளருக்கு வெளிப்படையாக ஆதரவை தெரிவிக்க முடியாது?

இதற்கான காரணத்தை விடயமறிந்த மற்றுமொரு தரப்பு முன்வைத்துள்ளது.

கட்சி பிளவுபடலாம் என்ற அச்சமே இதற்கு காரணம் சிறீலங்கா பொதுஜன பெரமுனவை எதிர்க்கும் மற்றுமொரு கட்சிக்கு ஆதரவளிப்பதை வெறுக்கும் பல உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் உள்ளனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது

எனினும், பொதுஜன பெரமுனவின் மூத்த தலைவர்கள் தேர்தல் பிரசாரத்தின் இறுதி கட்டத்திலாவது இணைந்து கொள்வார்களா என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. (ஐ)

## ரமேஷ் அடிகளாருக்கு 'தேசபந்து' விருது!



வடமராட்சி, ஜன. 22

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டை சேர்ந்த அருட்தந்தை ரமேஷ் (சதீஸ்குமார்) அமதி அடிகளாருக்கு அரசின் உயர் விருதுகளில் ஒன்றான தேசபந்து விருது வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச மாநாடு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அருட்தந்தையின் சமூகத் தன்னார்வ தொண்டுப் பணிக்காகவும், நாட்டில் மனித நேயத்தையும், மனித மாண்பையும், பாதுகாத்து மேம்படுத்தும் செயல் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமைக்காகவே இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.(ஐ-02)



கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுப்புடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. புனித சவேரியார் குருத்துவ கல்லூரியின் விரிவுரையாளர் அருட்தந்தை ஜெயரஞ்சன் ஒப்புக்கொடுத்திருந்தார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.01.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், தை 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் புதிய தலைவர்

நேற்றைய எமது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டது போன்று தமிழரசு கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். போட்டியென்று வருகின்றபோது ஒருவர் வெற்றி பெறுவது சாதாரணமானது. அந்த வகையில் ஜனநாயக முறைப்படி தமிழரசுக் கட்சி அதன் தலைவரை தெரிவு செய்திருக்கின்றது. அந்த வகையில் புதிய தலைவர் இதுவரையான தமிழரசு கட்சியின் நகர்வுகளில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றார் - அவர் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவார் என்பதைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டும்.

தமிழரசு கட்சியின் தலைவருக்கான தேர்தல் பிரசாரங்களில் ஆரம்பத்திலிருந்தே தமிழ்த் தேசிய பிரசாரங்களே முன்னெடுக்கப்பட்டன. அந்தப் அடிப்படையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டவரின் வெற்றியை அவரது ஆதரவாளர்கள் தமிழ்த் தேசியத்தின் வெற்றியாகவே நோக்குவதாகத் தெரிகின்றது. ஆனால், இது உண்மையிலேயே தமிழ்த் தேசியத்தின் வெற்றியா?

தமிழ்த் தேசியத்தின் வெற்றி என்பது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இறுதியில் எவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதால் மட்டுமே அளவிடப்படும். அப்படித்தான் அளவிடவும் முடியும். ஒரு தனிநபர் தமிழரசு கட்சியின் தலைவராக வருவதை தமிழ்த் தேசியத்தின் வெற்றியாக நோக்கினால் - அவர் இரண்டு வருடங்களின் பின்னர் தோல்வியடைந்தால் அதனை தமிழ் தேசியத்தின் தோல்வியாகவே நோக்க வேண்டிவரும். எனவே, இவ்வாறான மாயைகளிலிருந்து தமிழ் சமூகம் விடுபட வேண்டும்.

புதிய தலைவராக வந்திருப்பவர் எவ்வாறான வழிமுறைகளை கையாளப் போகின்றார்? ஏனைய கட்சிகளோடு எவ்வாறான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளப் போகின்றார்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் சுவாசமளிக்க முற்படுவாரா? அரசியலில் எவ்வாறான யதார்த்தமான அணுகுமுறைகளை கையாளப் போகின்றார்? உலக விடயங்களை புரிந்து கொண்டு, அதற்கேற்ப எவ்வாறான அணுகுமுறைகளை மேற்கொள்வார்? இவ்வாறு பல கேள்விகளின் வழியாகவே தமிழரசு கட்சியின் புதிய தலைவரின் செயல்பாடுகள் அளவிடப்படும். அவரும் வழமைபோல் கற்பனையான வாதங்களுக்குள் காலத்தை கழித்துக்கொண்டு, வெறுமனே பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றும் அரசியலை முன்னெடுப்பவராக இருந்தால் அவரையும் பத்தோடு பதினொன்றாகவே வரலாறு பதிவு செய்யும்.

2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பது அடிப்படையில் கடந்தகால கற்பனையில் திளைப்பதாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டது. அதற்காக பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் தங்களின் உயிர்களை தியாகம் செய்திருந்தனர் என்பதும் எந்தளவுக்கு மறுக்க முடியாத உண்மையோ அதேயளவுக்கு இன்னொரு மறுக்கமுடியாத உண்மையும் உண்டு - அதாவது, அவ்வாறான தியாகங்கள் எவையும் விடுதலைப் புலிகளையும் காப்பாற்றவில்லை - அவர்களை நம்பியிருந்த மக்களையும் காப்பாற்றவில்லை. ஏன் இவ்வாறானதோர் அழிவு ஏற்பட்டது? ஏன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை உலகமே ஏற்றுக்கொள்ளவில்லை - மாறாக அழிக்க முற்பட்ட இலங்கை அரசுடன் உலகம் நின்றது?

2009இற்கு பிற்பட்ட காலத்தில் தமிழ் தேசியத்தை முன்னெடுக்க முற்பட்டவர்கள் இந்தக் கேள்விக்கான பதிலிலிருந்தே, அடுத்த கட்ட அரசியலை ஆரம்பித்திருக்க வேண்டும் – ஆனால், எவருமே அவ்வாறு செய்யவில்லை. வெறும் கற்பனைகளிலேயே காலத்தை விரயம் செய்தனர். ஆனால், கடந்த பதினான்கு வருடகால அரசியல் நகர்வுகள் - தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் எந்தவொரு குறிப்பிட்ட முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை. இதிலிருந்து எதனை நாம் கற்றுக்கொண்டிருக்கின்றோம் ?

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் இது தொடர்பில் சிந்திக்கக்கூடியவராக இருந்தால் மட்டுமே அவரால் கட்சியையும் அதனை நம்பும் மக்களையும் முன்னோக்கி கொண்டுசெல்ல முடியும். ஆகக்குறைந்தது தமிழரசு கட்சியின் புதிய தலைவர் தன்னை சுற்றி ஆளுமையுள்ள யதார்த்தவாதிகளை எப்போதும் வைத்திருக்கக்கூடியவராக இருக்க வேண்டும். தேர்தல் வெற்றிக்காக உள்ளூரில் பேசும் விடயங்களால் கிடைக்கும் கரகோசங்களை கொண்டு அரசியல் சூட்சுமங்களை கையாள முடியாது. தமிழரசு கட்சியின் புதிய தலைவருக்கு இந்த உண்மை விளங்கினால் மட்டுமே, அவர் தமிழரசு கட்சியின் வரலாற்றில் தனித்துவமான தலைவராக இருக்க முடியும்.

# புதிய அரசாங்கத்துக்கான மாற்றம் இந்த ஆண்டில் ஏற்படுத்தப்படும்!

## அநுரகுமார திஸநாயக்க

கண்டி, ஜன. 22

தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்ற வேண்டும் என்ற மக்களினதும் தேசிய மக்கள் சக்தி கட்சியினதும் கொள்கை இன்று ஒன்றாக மாறியுள்ளதால் இந்த ஆண்டில் புதிய அரசாங்கத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து வகையிலும் மூழ்கிக்கொண்டிருக்கும் நாட்டை காப்பாற்ற புதிய மறுமலர்ச்சி யுகம் காலத்தின் கட்டாயத் தேவை என்றும் அவர் கூறினார்.

மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்ற பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்றுவது வெறும் அரசியல் வேலைத் திட்டம் அல்ல, தேசிய செயற்பாடு. புதிய மாற்றத்துக்காக மக்கள் தற்போது முன்வருகின்றனர்.

பொருளாதார ரீதியிலும் அனைத்து துறைகளிலும் நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் இன்று இருந்த இடத்தில் இருந்து ஒரு படி முன்னேறி நாட்டை கட்டியெழுப்பியுள்ளதாக கூறப்படுவது நகைப்புக்குரியது.

ஆகவே, இந்தப் பேரினவாத கும்பலிடம் இருந்து நாட்டை விடுவித்து, நாட்டைப் புதிய பாதைக்கு வழி நடத்த வேண்டும். இதுவே தேசிய மக்கள் சக்தியின் இலக்காகும். மக்கள் வாக்குகள் தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதை அறிந்த அரசாங்கம் தற்போது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதா என்ற குழப்பத்தில் உள்ளது.

எந்தத் தேர்தலை முதலில் நடத்தினாலும் அதனை எதிர்கொள்ள தேசிய மக்கள் சக்தி கட்சி தயாராக உள்ளது. நாட்டில் மரக்கறிகளின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்றவாறு விநியோகம் இல்லாதபோது விலை அதிகரிப்பது சந்தைக் கோட்பாடு. இந்த சூழலில் இதனை அரசாங்கம் தலையிட்டு முகாமைத்துவம் செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# விழா மண்டபங்களுக்கான முற்பதிவு கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜன. 22

நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், முற்பதிவுகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பதற்கு அகில இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக, எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும் முற்பதிவுகளுக்கான கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.

தற்போது அனைத்து துறைகளின் பொருளாதார வளர்ச்சியும் 50 வீதத்தால் குறைவடைந்து செல்லும் நிலையே காணப்படுகிறது.

மரக்கறிகள் மாத்திரமின்றி அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளதால், நட்டத்தை ஈடுசெய்ய முடியாத நிலையில் மண்டப உரிமையாளர்கள் உள்ளனர்.

திருமண மண்டபங்கள், விழாக்களுக்கான மண்டபங்கள் என்பனவற்றுக்கான உணவு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் தமது தொழில்சார் உறுப்பினர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமையை கருத்தில்கொண்டு முற்பதிவுகளுக்கான கட்டணங்களை 10 வீதம் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 1008 சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 22

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்தப் பெருந்திருவிழாவில் ஏழாம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ)

# கால்வாய்களை திருத்த 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## விவசாய அமைச்சர் அறிவிப்பு


கொழும்பு, ஜன. 22

நாட்டில் கடந்த காலங்களில் பெய்த பலத்த மழையால் பல கால்வாய்கள் சேதமடைந்துள்ளன என்று விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், பாதிக்கப்பட்டுள்ள கால்வாய்களை புனரமைப்பதற்கான பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த புனரமைப்பு பணிகளுக்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், சேதமடைந்துள்ள சிறு கால்வாய்கள் அனைத்தும் இந்த வருடத்துக்குள் புனரமைக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 22 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 08**
**நல்ல நேரம் : 12.35 - 02.05**
**ராகு காலம் : 08.05 - 09.35**
**திதி : துவாதசி**

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். நீங்கள் எதை பேசினாலும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். குடும்பத்தில் பிரச்னைகள் நீங்கும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள் வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வ வழிபாடு அதிகரிக்கும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். வாகனங்களை சீர் செய்வீர்கள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**தனுசு**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும் எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**கும்பம்**
தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.

# அயோத்தியில் இன்று கும்பாபிஷேகம் தமிழ்நாட்டில் விசேட பூசைகளுக்கு தடை!

சென்னை, ஜன. 22

அயோத்தியில் இன்று இராமர் கோவில் கும்பாபிஷேகம் நடக்கிறது. இதை முன்னிட்டு தமிழக கோவில்களில் அன்னதானம் மற்றும் சிறப்பு பூசை நடத்தக்கூடாது என தமிழக அரசு தடை விதித்து வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளது. இது, தமிழகம் முழுவதும் பக்தர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது - இவ்வாறு தமிழகத்தின் பிரபல நாளிதழான தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது.

முக்கிய பண்டிகைகளின் போது, அந்தந்த பகுதியில் உள்ள பக்தர்கள், இந்து அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சியினர் தங்கள் சொந்த செலவில் கோவிலில் அன்னதானம் வழங்குவது வழக்கம் சிறப்பு பூசைகளும் செய்யப்படும். கட்சி பாகுபாடு இல்லாமல் அனைவரும் இந்த வழக்கத்தை பின்பற்றுகின்றனர்.

இந்த நிலையில், இன்றைய தினம் அயோத்தியில் இராமர் கோவில் திறக்கப்படுவதை ஒட்டி நாடே விழாக்கோலம் பூண்டுள்ள நிலையில், தமிழக கோவில்களிலும் பக்தர்கள் மற்றும் அமைப்புகள் சார்பில் சிறப்பு பூசைகள் நடத்தி அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டன. ஆனால், அதற்கு தடை விதித்து தமிழக அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

“அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு தமிழக கோவில்களில் சிறப்பு பூசை, அன்னதானம் வழங்குதல், அது சார்ந்த நிகழ்ச்சிகள் எதுவும் நடத்தக்கூடாது. “கோவில் நிர்வாகம் சார்பிலோ பக்தர்கள் பெயரிலோ அமைப்புகள், கட்சிகள் பெயரிலோ எந்த நிகழ்ச்சியும் நடத்தக்கூடாது. அதை விளம்பரப்படுத்தி பதாகை வைக்கக்கூடாது. மீறி அன்னதானம் உள்ளிட்ட எந்த நிகழ்ச்சிகள் நடந்தாலும், சம்பந்தப்பட்ட கோவில் செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்“ என வாய்மொழியாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், “கோவில்களில் சிறப்பு பூசை செய்யக்கூடாது என சொல்கிற அதிகாரம், தமிழக அரசுக்கு எந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது என விளக்க வேண்டும். வரலாற்று சிறப்பு மிக்க நாளில் இராமருக்கு பூசை செய்வதை தடுக்கும் உரிமை எந்த அரசுக்கும் இல்லை. தடுத்தால், தடையை மீறி சிறப்பு பூசை நடத்தப்படும்” என்று பாரதிய ஜனதா கட்சி நிர்வாகம் தெரிவித்தது - என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# இராமேஸ்வரத்தில் மோடிக்கு வரவேற்பு

இராமேஸ்வரம், ஜன. 22

இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம் செய்தார். முன்னதாக அக்னி தீர்த்த கடலில் பிரதமர் புனித நீராடினார். இராமேஸ்வரத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழா இன்று நடக்கிறது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி 11 நாட்கள் விரதம் இருந்து வருகிறார். மேலும், பல்வேறு ஆன்மிக தலங்களுக்கும் சென்று வழிபாடு நடத்தி வருகிறார். அந்த வகையில் தமிழகத்துக்கு 3 நாள் பயணமாக பிரதமர் வெள்ளிக்கிழமை வருகை தந்தார்.

தமிழக பயணத்தின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் சென்னையில் இருந்து விமானம் மூலமாக திருச்சி சென்ற பிரதமர், அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலமாக பஞ்சகரை சாலைக்கு சென்று அங்கிருந்து சாலை மார்க்கமாக ஸ்ரீரங்கம் கோயிலை அடைந்தார். அங்கு அவர் முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை சுவாமி தரிசனம் செய்தார். திருச்சியில் சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்ட பிரதமர் மோடி, விமானம் மூலமாக இராமேஸ்வரம் சென்றடைந்தார். அங்கு பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வழிநெடுங்கிலும் குழுமியிருந்த பொதுமக்களும், பா. ஜ. கவினரும் மலர் தூவி பிரதமரை வரவேற்றனர்.

பின்னர், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் பிரதமர் மோடி புனித நீராடினார். கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை செய்து பிரதமருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கோயிலில் பிரதமர் மோடி சிறப்பு வழிபாடு நடத்தினார். தொடர்ந்து சிறப்பு பூசைகள் நடைபெற்றன. தொடர்ந்து கோயிலில் உள்ள திருமண்டபத்தில் அமர்ந்து இராமாயணம் பாடப்படுவதை பிரதமர் மோடி கேட்டார். (ஐ)

# இந்தியா கூட்டணிக்கு தமிழ்நாடு, புதுவையில் ஸ்டாலின் தலைமை

சென்னை, ஜன. 22

தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் அஜோய் குமார் அளித்த பேட்டியில் இந்தியா கூட்டணியின் வலிமையான தலைவராக மு. க. ஸ்டாலின் திகழ்கிறார் என்றும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இந்தியா கூட்டணியை மு.க.ஸ்டாலின் வழிநடத்துவார் என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையில், தமிழ்நாடு காங்கிரஸின் புதிய மேலிட பொறுப்பாளர் அஜோய் குமார் முன்னிலையில் மாநில தேர்தல் குழு கூட்டம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தி. மு. க. - காங்கிரஸ் உடனான கூட்டணி உறுதியாக உள்ளது. தமிழகம், புதுச்சேரியுடன் சேர்த்து 40 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி வெற்றி பெறும். இந்தியா கூட்டணியில் தி. மு. க. தலைவர் மு. க. ஸ்டாலின் வலிமையான தலைவராக இருக்கிறார். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இந்தியா கூட்டணியை மு.க.ஸ்டாலின் வழி நடத்துவார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான தொகுதி பங்கீடு பேச்சு குழுவை தி.மு.க. அறிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் தொகுதி பங்கீடு பேச்சு குழு இன்னும் 2 தினங்களில் அறிவிக்கப்படும்.

ஜனாதிபதி ஒரு பழங்குடியின பெண் என்பதால் அவரை ராமர் கோவில் திறப்பு விழாவிற்கு பிரதமர் மோடி அழைக்கவில்லை. மத்திய பாரதிய ஜனதா அரசு இராமரின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாயை செலவழித்து வருகிறது. இதன் மூலம் பாரதிய ஜனதா தலைவர்கள் சொத்துகளை குவித்து வருகின்றனர். இதே நேரத்தில் நெல்லை மற்றும் சென்னை வெள்ள பாதிப்புகளுக்காக தமிழக அரசு நிவாரணத் தொகையாக கேட்கும் ரூ. 38 ஆயிரம் கோடியை வழங்கவில்லை. பிரதமரின் ஏமாற்று வேலையை தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)



## புல்லாவெளி புனித செபஸ்தியார் திருவிழா சிறப்பாக நடைபெற்றது

வடமராட்சி, ஜன. 22

வடமராட்சி கிழக்கு பிரசித்தி பெற்ற புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா நேற்று முன்தினம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் காலை 7 மணிக்கு கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி ஆரம்பமானது. திருவிழா திருப்பலியை சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அச்சுவேலி பங்குத்தந்தை - மைக்கல் சௌந்தரநாயகம் ஒப்புக் கொடுத்தார்.

வடக்கு மாகாணத்தின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியக பொறுப்பாளர் தேசபந்து ரமேஸ் அடிகளாரும் இணைந்து திருப்பலியை சிறப்பித்ததோடு திருப்பலி நிறைவில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்ததுடன், நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றிச் சென்றனர்.(ஐ-2)

## யுவதி மீது தாக்குதல் இரு பெண்கள் கைது!

வவுனியா, ஜன. 22

வவுனியாவில் யுவதி ஒருவர் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த யுவதி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கழிவுநீர் மற்றும் வெள்ள நீர் என்பன வீதியில் உள்ள வாய்கால் ஊடாக செல்வது தொடர்பில் அயலவர்கள் இருவரிடையே முரண்பாடு ஏற்பட்டுது.

இது தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு முறைப்பாடும் அளிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணப்படவில்லை.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை கழிவுநீர் வெளியேற்றப்பட்ட நிலையில் அயல் வீட்டுக்குள் சென்றுள்ளது. இது தொடர்பில், பாதிக்கப்பட்ட பெண் அயல் வீட்டாருடன் முரண்பட்டுள்ளார். இதன் போது, கழிவுநீரை வெளியேற்றிய வீட்டை சேர்ந்த இரு பெண்கள் அந்த யுவதியை தாக்கியுள்ளனர். இதில், பாதிக்கப்பட்ட யுவதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்குக்கான இந்தியாவின் உதவி தொடர்ந்தும் கிட்டும்

### வடக்கு ஆளுநருக்கு இந்திய தூதுவர் உறுதி

கொழும்பு, ஜன. 22

**வடக்கு மாகாணத்துக்கான இந்திய உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வடக்கு ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸுக்கு உறுதியளித்துள்ளார்.**



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்தார். கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயல்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன் போது ஆளுநரால் இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி புரியும் என தெரிவித்த உயர்ஸ்தானிகர், விசேடமாக வடக்கு மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

## சர்வதேச தமிழர் பூப்பந்தாட்ட போட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 22

உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவை வருடாந்தம் உலகளாவிய ரீதியில் நடத்திவரும் 9ஆவது பூப்பந்தாட்ட தொடர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 31 - ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக உள்ளக அரங்கில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது தொடர்பான ஊடக சந்திப்பு உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் நிறுவுநர் தலைவர் கந்தையா சிங்கம் தலைமையில் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது, “ஓர் அமைப்பு என்பது கலாச்சாரம் மற்றும் தலைமுறைகளை இணைப்பது மற்றும் ஒன்றாக பிணைக்கப்படும்போது குடும்பமாகமாறும் நண்பர்களின் குழுவை உருவாக்குகிறது. தமிழ்ச் சமூகம் உலகெங்கிலும் இணையவும், இணைந்திருக்கவும் விரிவுபடுத்தவும் இது ஒரு சிறந்த வழியாக அமைகிறது.

மிக முக்கியமாக, நமது இளைஞர்கள் சுறுசுறுப்பாகவும், அவர்களின் கலாசாரம் மற்றும் வரலாற்றை பற்றி அறிந்து கொள்வதில் ஈடுபாடு காட்டுவதும் ஆகும். பூப்பந்து விளையாட்டு இளைஞர்கள், பெரியவர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கையை ஊக்குவிக்கிறது.

“பூப்பந்து (இறகுப்பந்து) என்பது வயது வித்தியாசமின்றி அனைவரும் விளையாடக் கூடிய ஒரு விளையாட்டு, மேலும் மூன்று தலைமுறை மக்களை ஒன்றிணைக்கிறது. உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை, உலகம் முழுவதிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் ஒன்றுபடுவதற்கும், ஒற்றுமையை ஏற்படுவதற்கும் ஒரு பாலமாகவும் இந்தத் தளம் வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் - என்று உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் தலைவர் தெரிவித்தார்.

## அமெரிக்க தமிழ் சங்கங்கள் கூட்டமைப்பின் மாநாடு யாழ். பல்கலையில் நடைபெற்றது!




யாழ்ப்பாணம், ஜன. 22

வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ். ஐ.ரி. ஹப் (Yarl IT hub) மற்றும் யாழ்.பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய மாநாடு வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

எமது பிரதேசத்தில் வளர்ந்து வரும் தொழில் முனைவோரை வலுப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை வளர்த்தல் எனும் தொனிப் பொருளில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் வட அமெரிக்க தமிழ்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவரான பாலா சுவாமிநாதன், முன்னாள் தலைவரான கால்டுவெல் வேல் நம்பி, கௌதம் ராஜன், ஒருங்கிணைப்பாளர்களான ஷான் நந்தகுமார், பார்த்தீபன் பரஞ்சோதி மற்றும் ‘யாழ். ஐ.ரி. ஹப்’ இன் ஒருங்கிணைப்பாளரான சயந்தன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீ சற்குணராஜா அமெரிக்க தொழிலதிபரான ராஜ் ராஜரட்ணம் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு அமெரிக்கா, கனடா மற்றும் இந்தியாவின் தமிழ்நாட்டில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல், பல வெற்றிபெற்ற தொழில் வல்லுநர்களின் தொழில் அனுபவ மற்றும் அறிவுப் பகிர்வுகள் என்பவற்றுடன் உள்ளூர் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் இம்மாநாடு இடம் பெற்றமை சிறப்பம்சமாகும்.

(ஐ)

## ‘தொடர் கதையாகும் ஆக்கிரமிப்பு’ பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் ‘தொடர் கதையாகும் ஆக்கிரமிப்புகள்’ எனும் தலைப்பில் புதன்கால மாணவர் அரங்கு கடந்த புதன்கிழமை கலைப்பீட பரீட்சை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாணவர் அரங்கில் ‘திட்டமிட்ட சிங்கள - பௌத்தமயமாக்கமும் பண்பாட்டு அழிப்பும்’ எனும் தலைப்பில் சமூகவியற்துறை மாணவன் நிதுர்சன் லம்பேட் (துணைத் தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றியம்), ‘நிலமிழந்தால் பலமிழப்போம்!’ எனும் தலைப்பில் சட்டத்துறை மாணவன் சிவகஜன் (துணைச் செயலாளர், கலைப்பீட மாணவர் ஒன்றியம்) ஆகியோர் கருத்துரையாற்றியிருந்தனர்.

ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படும் புதன்கால மாணவர் அரங்கு, மாணவர்களின் தனித்திறனை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட நிகழ்வுகள், சமூக அரசியல், பொருளாதார விடயப்பரப்புக்கள் தொடர்பான புலமையாளர்களின் கருத்துப்பகிர்வுகள் உள்ளிட்ட அம்சங்களை கொண்டமைந்ததாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)





# தேசிய பொங்கல் விழா; ஹற்றனில் பிரமாண்டம்!

## தென்னிந்திய பிரபலங்களும் பங்கேற்பு

ஹற்றன், ஜன. 22

தேசிய தைப்பொங்கல் விழா ஹற்றன் - டன்பார்க் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் தென்னிந்திய திரையுலகின் பிரபலங்களும் பங்கேற்றனர்.

1008 பொங்கல் பானை வைக்கப்பட்டு, தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடன் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அத்துடன், கோலப் போட்டி, தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான சிலம்பாட்டம் பொங்கல் பொங்கும் போட்டி, உட்பட பல பாரம்பரிய போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திரையுலக பிரபலங்களான ஐஸ்வர்யா ராஜேஷ், சம்யுக்தா, மீனாட்சி கோவிந்தராஜன், ஐஸ்வர்யா தத்தா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன், மத்திய மாகாண ஆளுநர்களான லலித்யு கமகே. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வட மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் வெளிநாட்டு பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஐ. தே. கவும் பெரமுனவும் எமக்கு சவாலானவையல்ல!

**சரத் பொன்சேகா**

கொழும்பு, ஜன. 22

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. ஆனால், இந்த இரு கட்சிகளும் பல வீனமடைந்த நிலையிலேயே உள்ளன. எனவே, இவை ஒரு போதும் எமக்கு சவாலான கட்சிகள் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் மக்களின் தவறான தீர்மானங்களால் தவறான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றனர். எனவே, இனிவரும் காலங்களில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், நாம் அவர்களுடன் இருப்போம்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. பொதுஜன பெரமுனவால் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரே தற்போதைய ஜனாதிபதியாக உள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மிகவும் பலவீனமடைந்த நிலைமையிலேயே உள்ளது. எனவே, இந்த கூட்டணி எமக்கு பெரும் சவாலாக அமையப்போவதில்லை.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப கட்சி முறையாக செயல்பட்டால் யார் யாருடன் கூட்டணி அமைத்தாலும் நாம் அச்சப்படத் தேவையில்லை. எமது நாட்டுக்கென கலாசாரமும் ஒழுக்கமும் காணப்படுகிறது. அவற்றுக்கு ஏற்பவே செயற்பட வேண்டும்.

'யுக்திய' என்ற பெயரில் பதில் பொலிஸ்மா அதிபரால் நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு செயல்படுவதால் பாதாள உலகக் குழுவினரையும் கட்டுப்படுத்த முடியாது. போதைப் பொருளையும் அழிக்க முடியாது - என்றார்.

(ஐ)

# பண மோசடிகளில் ஈடுபட்ட பெண் அரசியல்வாதி கைது!

கொழும்பு, ஜன. 22

உள்ளூராட்சி சபையின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒருவர் பண மோசடி குற்றச்சாட்டில் கேகாலை - ரம்புக்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிவடுன்ன பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ரம்புக்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டார்.

நலத்திட்டங்கள், சுய தொழில் வாய்ப்புகள், இசை நிகழ்ச்சிகள், குறைந்த வருமானம் பெறுவோரின் குழந்தைகளுக்கு பயிற்சிப் புத்தகங்கள் வழங்குதல் எனக் கூறி பல்வேறு மோசடிகளில் அந்தப் பெண் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# இந்துமா சமுத்திரத்தில் நேற்று நிலநடுக்கம்!

கொழும்ப, ஜன. 22

இந்துமா சமுத்திரத்தின் தென்மேற்கு பகுதியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை அதிகாலை 3.39 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளதாக இந்திய தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுமார் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டத்தால் கருத்து சுதந்திரம் பாதிக்கப்படலாம்!

கொழும்பு, ஜன. 22

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டத்தால் ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களும் வெளிப்படையாக கருத்துகளை வெளிப்படுத்த தயங்கக்கூடிய சூழலை உருவாக்கலாம் - இவ்வாறு, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டம் (சட்டமூலம்) மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீதான அதன் தாக்கங்கள் குறித்து தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளன.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

சட்டமூலத்தின் நோக்கமாக இணையவழி இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் அதேவேளை, இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மற்றும் பரந்தளவில் சமூகத்துக்குப் பொருந்தாத பல சர்ச்சைக்குரிய காரணிகளை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அடையாளம் கண்டுள்ளது.

2023 நவம்பரில், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் பாராளுமன்றக் குழு விவாதத்தில் முன்மொழியப்படவுள்ள திருத்தங்களைக் கருத்தில் கொண்டு, சட்டமூலத்தில் உள்ள 56 உறுப்புரைகளில் 31, ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தின் பிரதிபலிப்பு உள்ளிட்ட ஜனநாயகம் மற்றும் இலங்கையின் அரசமைப்பின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஆணையத்தின் செயற்பாடுகள், அதன் சுயாட்சி மற்றும் குற்றங்களின் வரையறைகள் உட்பட அதன் கட்டமைப்பை மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமூலமானது அதன் விதிகளில் பல குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக விதிமுறைகளின் தெளிவற்ற வரையறை மற்றும் குற்றங்களை வரையறுப்பது, தன்னிச்சையான மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் கணிசமான சவால்களை முன்வைக்கிறது. இது பல்வேறு வகையான சட்டபூர்வமான வெளிப்பாட்டின் சாத்தியமான குற்றமயமாக்கல் பற்றிய கடுமையான கவலைகளை எழுப்புகிறது. ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களும் வெளிப்படையாக கருத்துகளை வெளிப்படுத்த தயங்கக்கூடிய சூழலை உருவாக்கலாம்.

பேச்சு சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளை குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுவதுடன் சுய தணிக்கை சூழலும் உருவாகலாம். உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி, ஆணையத்தின் பாரபட்சமற்ற தன்மையை சமரசம் செய்யக்கூடிய எந்தவோர் அரசியல் அல்லது பிற செல்வாக்கையும் தவிர்த்து, அதன் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# சட்டவிரோதமாக மாடுகளை கொண்டுசென்ற மூவர் கைது

கொழும்பு, ஜன. 22

சட்ட விரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச் சென்ற மூவர் லொறியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை - ஹாலிஎல திக்வெல்லவத்தை பகுதியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெலிமடை, குருத்தலாவ மற்றும் அட்டம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 34, 41 மற்றும் 44 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைது செய்யும் போது இரண்டு எருமை மாடுகளும், ஒரு பசுவும் லொறியில் அடைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஹாலிஎல, கடவல பகுதியிலிருந்து வெலிமடை, குருத்தலாவ பகுதிக்கு இந்த மாடுகள் சட்ட விரோதமாக கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பொருளாதார பயங்கரவாதத்தை நாடு எதிர்நோக்கி வருகின்றது!

**எதிர்க்கட்சி தலைவர்**

கொழும்பு, ஜன. 22

எமது நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து இராணுவத்தினர் காப்பாற்றிய போதிலும், இன்று எமது நாடு பொருளாதார பயங்கரவாதத்தை எதிர்நோக்கி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற சமகி ரணவிரு பலவேக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை பொருளாதாரப் பயங்கரவாதமாகவே காணப்படுகின்றது. பயங்கரவாதிகள் என்பது மக்களின் உயிரை பறிப்பவர்கள். மத்திய வங்கி மீதான தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதல் என்றும், நாட்டின் உழைக்கும் மக்களின் நலன்புரி நிதியில் ஏற்பட்ட பாதிப்பும் பயங்கரவாதமே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# உலகின் வலுவான இராணுவம் இலங்கைக்கு 75ஆவது இடம்!

நியூயோர்க், ஜன. 22

**சர்வதேச அளவில் எந்த நாட்டின் இராணுவம் பலமாக இருக்கிறது. எந்த இராணுவம் பலவீனமாக இருக்கிறது என்பது குறித்த பட்டியலை குளோபல் பயர்பவர் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.**

இந்தப் பட்டியலின்படி, சர்வதேச அளவில் அதிக சக்தி வாய்ந்த இராணுவமாக அமெரிக்கா இருக்கிறது. அதைத் தொடர்ந்து ரஷ்யா மற்றும் சீனா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

இந்தியா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. அடுத்த 10ஆவது இடம்வரை தென்கொரியா இங்கிலாந்து, ஜப்பான், துருக்கி, பாகிஸ்தான், இத்தாலி ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் இலங்கை 75ஆவது இடத்தில் உள்ளது.

ஆளணி எண்ணிக்கை, இராணுவ உபகரணங்கள், நிதி, புவியியல் இருப்பிடம் மற்றும் வளங்கள் என மொத்தம் 60இற்கும் மேற்பட்ட காரணங்களை அடிப்படையாக வைத்து இந்த 2024 ஆம் ஆண்டுக்கான இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் படியலில் மொத்தம் 145 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த 60 காரணங்களையும் வைத்துக் கணக்கிட்டே பவர் இன்டெக்ஸ் புள்ளியை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

*மின்சார கட்டண திருத்தம்:*

# பொதுமக்கள் கருத்துகளை நாளை முதல் தெரிவிக்கலாம்!

கொழும்பு, ஜன. 23

நாளை செவ்வாய்க்கிழமை முதல் 21 நாட்களுக்கு மின்சார கட்டணத்தை திருத்துவது குறித்து பொது மக்கள் தமது கருத்துகளை தெரிவிக்க முடியும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சார கட்டணத்தை இலங்கை மின்சார சபை திருத்துவதற்கான முன்மொழிவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கயுள்ளது.

இந்நிலையில், குறித்த முன்மொழிவு தொடர்பாக கலந்தாலோசிக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் ஒன்றுகூடவுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாளை செவ்வாய்க்கிழமை முதல் 21 நாட்களுக்கு மின்சார கட்டணத்தை திருத்துவது குறித்து பொது மக்களின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்படும். இந்த 21 நாட்களும் மக்கள் தமது கருத்துகளை எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்க முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)



# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு!

புதுடில்லி, ஜன. 22

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் “கம்பாலா நகரில் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் பாராட்டத்தக்கது. அயல் நாடுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை ‘சாகர்’ கொள்கை பிரதிபலிக்கிறது.” என்று குறிப்பிட்டிருந்தார். (ஐ)

# சதொசவில் முட்டையின் விலை ரூ. 43ஆக உயர்வு!

கொழும்பு, ஜன. 22

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டை ஒன்றின் விலை 43 ரூபாயாக அதிகரிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 35 ரூபாய்க்கு விற்க முடியாததால் சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனைக்கு கட்டுப்பாடு விதித்துள்ளன. இதன்படி சதொசவில் முட்டை தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், சந்தையில் நாட்டு முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 22

தொலைபேசி நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு மாத்தறை - தெலிஜ்ஜவில பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர் ஒருவர் தொலைபேசி விற்பனை நிலையமொன்றினுள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ‘எட்கா’ உடன்பாட்டால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறும்!

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 22

“எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் மாநிலம்போல் ஆகிவிடும்.” - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

எட்கா உடன்படிக்கை கொண்டுவரப்படக்கூடாது என பல போராட்டங்கள் இடம்பெற்று, அந்த முயற்சி அன்று தோற்கடிக்கப்பட்டது. தற்போது எட்காவை கைச்சாத்திடுவதற்கு முயற்சி இடம்பெறுகின்றது. குறித்த உடன்படிக்கை கைச்சாத்திட்டால் இலங்கையில் சேவை சந்தைக்குள்ளும் இந்தியர்கள் வந்துவிடுவார்கள். இந்திய மருத்துவர்கள் மட்டுமல்ல விவசாயிகளும் வரமுடியும்.

இது இரு நாடுகளுக்குமானது எனக் கூறப்பட்டாலும் ஒரு கதவுதான் திறக்கப்படும் என்பதே உண்மை.

இதேவேளை, இந்தியாவுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் தேவையான அனைத்து விடயங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைவேற்றிவருகின்றார். இவை தொடர்பில் அரசியல் களத்தில் பேசப்படுவதில்லை.

இலங்கை மின்சார சபையை 8 ஆக உடைத்து விற்பனை செய்யும் திட்டம் 2003 இல் கொண்டுவரப்பட்டது, தற்போது அந்த முயற்சி மீண்டும் இடம்பெறுகின்றது. சமூகத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதன்மூலம் மிகவும் சூட்சுமமான முறையில் நகர்வுகள் இடம்பெறுகின்றன. சிறு சம்பவங்களை உருவாக்குவதன் மூலம் பிரதான சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன.

சிவில் சமூக செயல்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. இவை தொடர்பில் மேற்குலக தூதுவர்கள் கதைப்பதில்லை. ஏனெனில் தமக்கு தேவையானவற்றை ரணில் நிறைவேற்றுவார் என்பது அவர்களுக்கு தெரியும். கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் இப்படியான சட்ட மூலங்கள் முன்வைக்கப்பட்டிருந்தால் அமெரிக்க தூதுவர் நாளொன்றுக்கு நான்கு ருவிற்ர் பதிவுகளையாவது பதிவிட்டிருப்பார். ரணில் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதை அவரைவிட இந்தியாவும், அமெரிக்காவுமே அதிகம் விரும்புகின்றன - என்றார். (அ)

# மருத்துவரை தாக்கிய குற்றச்சாட்டில் சுகாதார ஊழியர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஜன. 22

மருத்துவரை தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, கராப்பிட்டி மருத்துமவனையின் புற்றுநோய் பிரிவில் கடமையாற்றும் விசேட மருத்துவரான கிரிஸாந்த பெரேராவை தாக்கிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர் காலி கொட்டவாகம பிரதேசத்தைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர் எனவும் மற்றையவர் அக்குரஸ்ஸ தியலபே பிரதேசத்தைச் சேர்ந்த பெண் சுகாதாரப் பணியாளர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற பணிப்புறக்கணிப்பில் புற்றுநோய் பிரிவின் ஊழியர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இளநிலை ஊழியர்கள் கலந்துகொண்டமை தொடர்பில் மருத்துவருக்கும் இளநிலை ஊழியர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, ஊழியர்கள் இருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட மருத்துவர் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருள் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தல்!

கொழும்பு, ஜன. 22

போதைப்பொருள் அச்சுறுத்தல் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்திற்காக 200 வளவாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்ற பயிலுனர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இத்திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்ட மூவர் திருக்கோவிலில் கைது!

**திருக்கோவில், ஜன. 22**
**அம்பாறை - திருக்கோவிலில் ஆயுதத் தயாரிப்பில் ஈடு பட்டிருந்த இடத்தை சுற்றிவளைத்து மூவரை விசேட அதி ரடிப் படையினர் நேற்று கைதுசெய்தனர்.**

விசேட அதிரடி படையின் திருக்கோவில் முகாம் அதிகாரி களுக்கு கிடைத்த தகவலின் பிர காரம் விநாயகபுரம் பகுதியில் இந்த சுற்றிவளைப்பு இடம்பெற் றது.

இதன்போது, சட்டவிரோத மாக துப்பாக்கிகளை தயாரித்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன், அவருக்கு உதவி யாக இருந்தவர், இரும்பு ஒட்டும் தொழிலகத்தை சேர்ந்த நபர் என மூவர் கைது செய்யப் பட்டனர்.

தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, துப்பாக்கி தயாரிக்கப் பயன்படும் இரும்பு குழாய்கள் 3, இரும்பு குழாய் வெட்டும் எந்திரம், அவற்றை ஒட்டுவ தற்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் என்பவையும் அதிரடிப் படையினரால் இதன் போது கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவத்தில், திருக் கோவில் மற்றும் கஞ்சிக்குடி யாறு ஆகிய பகுதிகளை சேர்ந்த 34, 42, 54 வயதுடைய 3 சந் தேகநபர்களே கைது செய்யப் பட்டனர். (ஐ)

# தேசிய கட்டட நிர்மாண சங்கத்தின் விருது வழங்கும் விழா முன்னெடுப்பு

மட்டக்களப்பு, ஜன. 22
இலங்கை தேசிய கட்டட நிர் மாண சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் வருடாந்தம் விருது வழங்கும் விழா நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது, 2022, 2023 ஆம் ஆண்டுகளில் சிறந்த கட் டட நிர்மாணிகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு சங்கத்தின் தலைவர் ரஞ்சிதமூர்த்தி தலை மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ச. வியா ழேந்திரன், அரச அதிபர் ஜி. ஜி. முரளிதரன் உட்பட பலர் பங் கேற்றனர்.

இலங்கையில் தேசிய நிர் மாண சங்கம் கட்டட ஒப்பந்தக் காரர்களை அங்கத்தவர்களாக கொண்டு நாட்டின் அபிவிருத் தியில் சிறந்த பங்காற்றி வரு வதுடன் அங்கத்தவர்களின் நல னிலும் அக்கறையுடன் செயல் படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)



# வாழ்வாதார உதவி வழங்கல்

அக்கரைப்பற்று, ஜன. 22
அக்கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 4 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

'மெஸ் லங்கா' நிறுவனத் தின் ஏற்பாட்டில் அக்கரைப் பற்று பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு குடும்பங் களின் வாழ்வாதாரங்களுக்காக தள்ளு வண்டில்கள் மற்றும் அதற்கு தேவையான ஆரம்ப பொருட்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் ரீ. எம். அன்சார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ஐ)

# இரண்டாம் மொழி கற்கையினரின் கலைவிழா நிகழ்வு சிறப்புற நடந்தது

மட்டக்களப்பு, ஜன. 22
அரச உத்தியோகத்தர்களுக் கான இரண்டாம் மொழி சிங் கள கற்கைநெறிக்கான இறுதி நாள் கலைவிழா நேற்று முன் தினம் மட்டக்களப்பில் நடை பெற்றது.

அரச உத்தியோத்தர்களுக் கான 150 மணித்தியாலங்களை கொண்ட 19 நாள் இரண்டாம் மொழி சிங்கள கற்றைநெறிக் கான இறுதி நாள் கலைவிழா நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர் ஷனி சிறிகாந்த் பிரதம அதிதி யாக கலந்து கொண்ட நிகழ் வில், மண்முனை வடக்கு பிர தேச செயலாளர் வீ.வாசுதேவன் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இக் கற்கைநெறியில் மட்டக் களப்பு மாவட்ட செயலக, மண் முனை வடக்கு பிரதேச செய லகம் மற்றும் ஏனைய திணைக் களங்களில் கடமையாற்றும் 65 அரச உத்தியோகத்தர்கள் இக் கற்கைநெறியை பூர்த்தி செய்தி ருந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# "70,000 கோடி டொலர் வெளிநாட்டில்!"

மட்டக்களப்பு, ஜன. 22
நாட்டுக்கு சொந்தமான 70 ஆயிரம் கோடி டொலர் வெளி நாடுகளில் பதுக்கி வைக்கப்பட் டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

வவுணதீவில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் - சில செல்வந்த முதலைகளால் சட்டவிரோதமான முறையில் ஏறக்குறைய 70 ஆயிரம் கோடி டொலர் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில், 5 ஆயிரத்து 600 டொலர் என்றா லும் அதை இலங்கைக்கு கொண்டுவரப்படுமாக இருந் தால் மக்களிடம் வரி அறவிட வேண்டியதில்லை, பொருட் களை அதிக விலைக்கு விற்க வேண்டியதில்லை - என்றார்.

# கல்முனை மருத்துவமனையால் பல இலட்சம் பேர் பயன்பெற்றனர்!

கல்முனை, ஜன. 22
கல்முனை ஆதார மருத்துவ மனையில் பல இலட்சம் பேர் சிகிச்சை ரீதியான நன்மைகளை கடந்த ஆண்டு பெற்றுள்ளனர்.

அம்பாறை - கல்முனை ஆதார மருத்துவமனையால் கடந்த ஆண்டு மக்களுக்காக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பானஅறிக்கை வெளி யிடப்பட்டது.

இதில், மருத்துவமனையின் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நோயாளிகள் 37 ஆயிரத்து 620, வெளிநோயா ளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் - ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 79, சாய்சாலை (கிளினிக்) நோயாளர் - ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 831, மருத்துவமனையில் நடை பெற்ற சத்திர சிகிச்சைகள் - 3 ஆயிரத்து 804, பாரிசவாத சிகிச்சைகள் - 331, கண் சத்திர சிகிச்சைகள் - 2 ஆயிரத்து 603, சி. ரி. ஸ்கான் சேவை எண் ணிக்கை - 5 ஆயிரத்து 544, ஆய்வுகூட பரிசோதனைகள் - 5 இலட்சத்து 40 ஆயிரம், மற்றும் இயன் மருத்துவ சேவை, நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம் போன்ற சேவைகளை ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 216 நோயாளர்கள் பெற்றனர்.

மேலும் 2023 ஆம் ஆண்டு மாத்திரம் 372 டெங்கு நோயா ளர்கள் இணங்காணப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந் தனர் என்பதும் குறிப்பிடத்தக் கது. (ஐ)

# கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது



காரைதீவு, ஜன. 22
பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேக கிரியைகள் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வந் தன. இதன் தொடர்ச்சியாக, வியாழக்கிழமை முதல் எண் ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற் றுக்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் வே. செவ்வேள் தலைமையில் நடைபெற்றது.

# அக்கரைப்பற்றில் இரத்ததான முகாம்!


அக்கரைப்பற்று, ஜன. 22
அக்கரைப்பற்று ஆதார மருத்துவ மனையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இரத்த தான முகாம் அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உயிர் காக்கும் உன்னத சேவையில் ஒன்றிணைவோம்" எனும் தொனிப் பொருளில்,

அக்கரைப்பற்று இன்ஸ் பைரிங் யூத்ஸ், அக்கரைப்பற்று ஐகோனிக் யூத்ஸ் அமைப்புகளின் ஒத்துழைப்பு டன்,

ஐ. பி. எச். எஸ். கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த இரத்த தான முகாமில் 90 பேர் வரையானவர்கள் பங்கேற்று இரத்த தானம் வழங்கினர். (ஐ)



# இராமர் கோயில் திறப்பு விழா; இராம நாம சங்கீர்த்தன நிகழ்வு

மட்டக்களப்பு, ஜன. 22
இந்தியாவின் அயோத்தியில் அமைக்கப்பட்ட இராமர் கோயில் திறப்பு விழா இன்று நடைபெறுகின்றது.

இதையொட்டி, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் இராம நாம சங்கீர்த்தனம் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜின் வழிகாட்டலில் உதவி பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மஹறாஜ் இதனை ஏற்பாடு செய்துள்ளார்.

இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை இராம நாம சங் கீர்த்தனம் நடைபெறும். இந்த நிகழ்வில் அனைவரையும் பங் கேற்குமாறு சிறீ மத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ கேட்டுள் ளார். (ஐ)



# அமெரிக்க தளம் மீது ஏவுகணை தாக்குதல்

பாக்தாத், ஜன. 22

ஈராக்கின் மேற்கு பகுதியில் அமெரிக்க தளமொன்றை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட ஏவுகணை தாக்குதலில் பல அமெரிக்க படையினர் காயமடைந்துள்ளனர்.

ஆசாத் விமான படைத்தளம் மீது ஈரான் சார்பு குழுவினர் தாக்குதலை நடத்தினர் என அமெரிக்க குற்றம்சாட்டியுள்ளது.

ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அல்ஆசாத் தளம் தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் பனிப்புயல் 61 பேர் மரணம் பலர் பாதிப்பு!



வாஷிங்டன், ஜன. 22

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. பனிப்பொழிவுடன் பனிப்புயலும் வீசி வருகிறது.

பனிப்புயலால் பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டென்னிசி, ஓரிகன் ஆகிய மாகாணங்களில் பனிப்புயல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் வீசி வரும் பனிப்புயலில் இதுவரை 61 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ஐ)

# இராமர் கோயில் திறப்பு விழா இன்று; அயோத்தியில் மூன்றடுக்கு பாதுகாப்பு

அயோத்தி, ஜன. 22

இராமர் கோயில் திறப்பு விழாவையொட்டி அயோத்தியில் மூன்று அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம் - அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமான இராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோயிலின் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், திரையுலகம், விளையாட்டு துறை பிரபலங்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் என 11 ஆயிரம் முக்கியஸ்தர்கள் பங்கேற்கின்றனர்.

இராமர் கோயில் திறப்பு விழாவின்போது தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளன. இராமர் கோயில் திறப்பு விழாவின்போது தற்கொலைப்படை தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியிருக்கின்றன என்று உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்காரணமாக அயோத்தி நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய அரசின் சிறப்பு பாதுகாப்பு படையிடம் (எஸ். பி. ஜி.) அயோத்தி நகர பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு படை (என். எஸ். ஜி), தீவிரவாத தடுப்புப் படை, சிறப்பு கமாண்டோ படை, சி. ஆர். பி. எவ்., மத்திய தொழில் பாதுகாப்பு படை, மாநில பொலிஸார் என சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் செயல்படும் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கமெராக்கள் அயோத்தி முழுவதும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கமெராக்கள் மூலம் பழைய குற்றவாளிகளின் முகங்களை அடையாளம் காண முடியும். ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள், கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

அயோத்தி மட்டுமன்றி உத்தரப் பிரதேசம் மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. குறிப்பாக உத்தர பிரதேசத்தை ஒட்டியுள்ள நேபாளத்தின் 570 கி.மீ. தொலைவு எல்லைப் பகுதியில் தீவிர ரோந்து பணி நடைபெறுகிறது.

இதேநேரம் முதல் வலய அயோத்தி நகரத்தில் பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகரின் பிரதான சாலைகள், தெருக்களில் பொது போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

உத்தரப் பிரதேசம் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து அயோத்திக்கு செல்லும் சாலைகளில் தீவிர சோதனை நடத்தப்படுகிறது. அந்நிய நபர்கள் அயோத்தியில் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

அயோத்தி நகரம் முழுவதும் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. இதன்படி இராமர் கோயில் வளாகம் சிவப்பு வளைய பாதுகாப்பு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராமர் கோயிலுக்கு செல்வதற்கான பிரதான பாதைகள் மஞ்சள் வளைய பாதுகாப்பு பகுதியாகவும், அயோத்தியின் இதர பகுதிகள் பச்சை வளைய பாதுகாப்பு பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இராமர் கோயில் வளாகத்தின் வான் பகுதியில் ட்ரோன்கள், ஹெலிகொப்டர், விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ட்ரோன்கள் பறப்பதை தடுக்க இராமர் கோயில் வளாகத்தில் சிறப்பு ஜாமர் கருவி பொருத்தப்பட்டு உள்ளது. பல கிலோமீற்றர் தொலைவில் ட்ரோன்கள் பறந்தால்கூட, சிறப்பு ஜாமர் கருவி அடையாளம் கண்டு, ட்ரோன்களை செயலிழக்கச் செய்யும். மத்திய அரசின் றோ உளவுப் பிரிவை சேர்ந்த அதிகாரிகள் அயோத்தியில் முகாமிட்டுள்ளனர்.

இதனிடையே, காலிஸ்தான் பிரிவினைவாத குழுவை சேர்ந்த மூவரை நேற்று பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ஐ)

## காஸா போரில் பலி எண்ணிக்கை 24,927ஆக உயர்வு!

காஸா, ஜன. 22

காஸாவில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 927-ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து பலஸ்தீன சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,

காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 165 பேர் உயிரிழந்தனர். இத்துடன், இந்தப் பகுதியில் இஸ்ரேல் படையினர் கடந்த ஒக். 7 முதல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 927ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேல் குண்டுவீச்சில் இதுவரை 62 ஆயிரத்து 388 பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விலையுயர்ந்த இராமாயணம் நூல் கோவிலுக்கு அன்பளிக்கப்படவுள்ளது

அயோத்தி, ஜன. 22

அயோத்தியில் இராமர் கோயில் இன்று திறக்கப்படுகின்றது. இந்த நிலையில், ஒரு புத்தக விற்பனையாளர் 1.65 இலட்சம் இந்திய ரூபாய் ( நம் நாட்டு மதிப்பில் சுமார் 6. 35 இலட்சம் ரூபாய்) மதிப்பிலான இராமாயண புத்தகத்தை கோயிலுக்குப் பரிசாக வழங்கவுள்ளார். இதுவே, உலகில் உள்ள இராமாயண புத்தகங்களில் மிகவும் விலை உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து அந்த புத்தக விற்பனையாளரான மனோஜ் சாத்தி கூறுகையில்,

வால்மீகி எழுதிய இராமாயண புத்தகம், கடவுள் இராமரின் வாழ்க்கை வரலாற்றை நமக்குக் கூறும் அருமையான புத்தகமாகும். தற்போது உலகின் மிக விலை உயர்ந்த இராமாயண புத்தகத்தை நான் உருவாக்கியுள்ளேன். இதன் மதிப்பு ரூ.1.65 இலட்சமாகும். 3 அழகான பெட்டிகளில் அச்சிட்டு இந்தப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இராமர் கோயில் 3 அடுக்குகளாக அமைவதைக் குறிக்கும் பொருட்டு 3 பெட்டிகளில் புத்தகம் தயாராகியுள்ளது.

இந்தப் புத்தகத்தை அச்சிடுவதற்கான காகிதம் பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த காகிதம் மீது அமிலத்தை வீசினாலும் அழியாது. புத்தகத்தின் அட்டை இறக்குமதி செய்யப்பட்ட கச்சா பொருளில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.




புத்தகத்தை அச்சிடுவதற்கான மை, ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட் டுள்ளது. புத்தகம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகள் அமெரிக்காவிலுள்ள வால்நட் மரம், குங்குமப்பூ மரங்களில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளன.

புத்தகத்தின் எடை 45 கிலோவாக இருக்கும். இது 400 வருடங்கள் ஆனாலும் அழியாது. நான்கு தலைமுறைகளுக்கும் மேல் இந்தப் புத்தகத்தை படிக்க முடியும். தற்போது மிகவும் அழகான அயோத்தி நகரை அடைந்துள்ளோம். மிகவும் விலை உயர்ந்த இராமாயண புத்தகத்தைப் போலவே, அயோத்தி நகரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. எனவே அயோத்தியில் மிகவும் அழகிய இராமாயணம் இருக்கிறது என்று சொல்லலாம். புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் வித்தியாசமான வடிவமைப்பு இருக்கும். கோயில் நிர்வாகத்திடம் புத்தகத்தை விரைவில் வழங்கவுள்ளோம் - என்றார். (ஐ)

# பெரமுனவை சேர்ந்தவரே ஜனாதிபதி வேட்பாளர்!

## கட்சியின் பொது செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 22

**ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடு என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

*பிரசன்ன ரணதுங்க மற்றும் திலும் அமுனுகம ஆகியோர் ரணில் விக்ரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தமை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் தனிப்பட்ட கருத்து. சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு அல்ல.*



*எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நான்கு உறுப்பினர்கள் ஏற்கனவே களமிறங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)*

# சிவில் உடையில் போக்குவரத்து சோதனை மேற்கொள்ள தடை!

## பொலிஸ் மா அதிபர் உத்தரவு

*கொழும்பு, ஜன. 22*

*சிவில் உடையில் போக்குவரத்து சோதனைகளை மேற்கொள்ள வேண்டாம் என பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.*

*நாரம்மலை பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.*

*சம்பவத்தில் உயிரிழந்த 41 வயதுடைய ரொஷான் குமார திலகவின் வீட்டிற்கு நிவாரணம் வழங்குவதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் நேற்று காலை குறித்த இடத்துக்கு சென்றிருந்தார்.*



*இதன் போது பத்து இலட்சம் ரூபாய் குறித்த குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)*

# ‘யுக்திய’ நடவடிக்கை; மேலும் 987 பேர் கைது!

*கொழும்பு, ஜன. 22*

*நாடு முழுவதும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் ‘யுக்திய’ நடவடிக்கையின்போது 987 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*கைதான சந்தேக நபர்களில் 663 பேர் பல்வேறு போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.*

*பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் விசேட பணியகத்தால் தேடப்பட்டு வரும் பட்டியலில் இருந்த 324 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இவர்களில் 12 பேருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் 5 பேருக்கு எதிராக சொத்து தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய 14 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.*

*இதன்போது 270 கிராம் ஹெரோயின், 140 கிராம் ஐஸ், 18 கிலோ 358 கிராம் கஞ்சா, 27,242 கஞ்சா செடிகள், 552 கிராம் மாவா, 175 கிராம் மதன மோதகம், 1,080 போதை மாத்திரைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)*

# உயர்தர மாணவர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல்!

*கொழும்பு, ஜன. 22*

*2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல்களை வழங்குவதற்கான விசேட திட்டமொன்று விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.*

*இந்தத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் உள்ள 300இற்கு மேற்பட்ட மையங்களில் நடைபெறும் என எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)*

# பொருளாதார மறுசீரமைப்புகளின் பலன்கள் எதிர்காலத்தில் கிடைக்கும்

## கூறுகிறார் சாகல ரத்நாயக்க

*கொழும்பு, ஜன. 22*

*அரசாங்கம் முன்னெடுத்து வரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புகளின் பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்குமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.*

*கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும் வகையில் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனை கூறினார்.*

*மேலும் கருத்து வெளியிட்ட அவர்,*

*பொருளாதாரம் சரிவடைந்து கிடந்த நிலையிலேயே நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை பலரும் மறந்து விட்டனர். நாட்டுக்குள் எரிபொருள் வரிசை காணப்பட்டது. எரிவாயுவுக்கு வரிசை காணப்பட்டது. மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.*

*ஆனால், இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் இருந்தாலும் அடுத்த நாளை எவ்வாறு கடத்துவது என்ற கேள்விக்குரியான நிலைமை இல்லாமல் போயுள்ளது.*

*பல்வேறு பொருளாதார மறுசீரமைப்புகளை நாட்டுக்குள் முன்னெடுத்துள்ளோம். அன்று 5 சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை 16 சதவீதமாக அதிகரிக்கும் இயலுமை கிட்டியுள்ளது.*

*சுற்றுலாத்துறையை நாம் இலகுவாக அபிவிருத்தி செய்யலாம். இன்றளவிலும் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. 25 இலட்சம் சுற்றுலா பயணிகள் இவ்வருடத்தில் இலங்கைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா அபிவிருத்திக்காக அன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று பலனளிக்கின்றன. அதனால் அந்நியச் செலாவணியும் அதிகமாக கிடைக்கிறது.*

*எமது நாட்டின் இளம் சமூகத்தினர் தொழில்நுட்ப துறையில் உயர்வான நிலையில் உள்ளனர். அதனூடான வெளிநாட்டு வருமானத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகிறன. எமது நாட்டுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் சிறந்த எதிர்காலம் உள்ளது. ஆனால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் நம்பிக்கை இல்லாதபோது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.*

*சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் நாட்டுக்கு மிகவும் அவசியமாகும். நாடு மீண்டும் பொருளாதார சரிவைச் சந்திக்க இடமளிக்க கூடாது. எதிர்க்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கள், மக்களுக்கு பலனளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.*

*சர்வதேசத்திற்கு எமது நாடு தொடர்பிலான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியப்படுகிறது.” - என்றார். (அ)*

# ஆணைக்குழுக்களின் அதிகாரிகள் அக்கறையற்றவர்களாக உள்ளனர்

## துறைசார் மேற்பார்வை குழு அதிருப்தி

கொழும்பு, ஜன. 22

கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் காட்டும் அக்கறையின்மை குறித்து தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு அதன் அதிருப்தியை வெளியிட்டது.

2020 இல் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை குழுவில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த விடயம் புலப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்றத்தால் கணக்காய்வு அறிக்கை மற்றும் சரியான தரவுகளை தருமாறு அறிவித்திருந்தாலும், கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்தும் நடவடிக்கையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபை என்பன அதற்கு வழங்கும் அக்கறையின்மை தொடர்பில் குழு வினவியது.

பாராளுமன்றத்தால் வழங்கும் பணிப்புரைகளை செயல்படுத்தத் தவறியமை பாராளுமன்றத்தை அவமதிப்பதாகும் எனத் தெரிவித்த குழு, மனிதத் தலையீடுகளை குறைக்கவேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. டிஜிற்றல் மயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் அதிருப்தியை வெளியிட்ட குழு கட்டமைப்பிலுள்ள ஒரு குழுவினர் காரணமாக அவ்வாறு டிஜிற்றல் மயமாக்குவது சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியது.

இவ்வாறு ஒரு குழுவினருக்கு இடமளிப்பதால் பாவனையாளர்கள்மீது சுமையை ஏற்படுத்துவது மட்டுமே என்றும், இந்த நிலையை சரிசெய்ய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இதைவிடவும் கடினமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழு வலியுறுத்தியது.

அத்துடன், இந்தக் குழுவில் மேலும் 5 ஆண்டறிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆம் ஆண்டறிக்கை, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2022 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 2022 ஆம் ஆண்டறிக்கை, 2020 இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் இலங்கை சீனி (தனியார்) கம்பனியின் 2017 ஆம் ஆண்டறிக்கை என்பன குழுவில் கருத்திற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டன.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஆண்டறிக்கையை கருத்திற்கொண்ட குழு, கழிவு நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தும் பொறிமுறை தொடர்பில் வருகை தந்த அதிகாரிகளிடம் வினவியது. பல்வேறு அபிவிருத்தியடைந்த நாடுகள் வினைத்திறனான கழிவு முகாமைத்துவக் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளதகவும் தேசத்தின் நம்மை கருதி அவ்வாறான பொறிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பில் கண்டறிய வேண்டும் என குழு வலியுறுத்தியது. (அ)

## தலைவர்...

சுமந்திரனை விட 47 வாக்குகளால் சிறீதரன் வெற்றி பெற்றார். தேர்தல் வெற்றி அறிவிப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம். பி.,

"முதலாவதாக வெற்றிபெற்ற எனது நண்பர் சிவஞானம் சிறீதரனுக்கு வாழ்த்துகளை தெரிவிக்கின்றேன். எமது கட்சியின் உள்ளக ஜனநாயகத்தை எடுத்துக்காட்டாக நிலை நிறுத்தியிருக்கின்றோம். கடந்த காலங்களில் மாவை சேனாதிராசா தலைமையில் சிறப்பாக கட்சி நடைபெற்றது. இதேபோன்று புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தலைவர் சிவஞானம் சிறீதரனுக்கும் என்னுடைய முழு ஆதரவையும் வழங்கி - அவருடன் சேர்ந்து பயணிப்பேன்" - என்றார். (ஐ.)

## தமிழரசு...

உரிமை மறுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. தங்களின் பெயர்கள் வாக்களிக்கும் பட்டியலில் இருந்தபோதும் அவை வெட்டப்பட்டிருந்தன என்று மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி செயலாளர் ரஜனி ஜெயபிரகாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாவட்ட தலைவருக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் சாடினார். இதனால், நேற்று பொதுக்கூட்டமும் தேர்தலும் நடைபெற்ற திருகோணமலை நகர சபை மண்டபத்தில் சிறிதுநேரம் குழப்பம் நிலவியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வித்தியா...

மனு மீதான விசாரணைகளை இன்றையதினம் எடுத்துக்கொள்ள நீதியரசர்கள் ஆயம் உத்தரவிட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு புங்குடுதீவில் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டார். இந்த வழக்கில் 7 பேர் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் ட்ரயல் அட் பார் மரண தண்டனை விதித்திருந்தது.

இந்த நிலையில், தமக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள விதம் சட்டத்துக்கு முரணானது என்று பிரதிவாதிகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தேசியத்தின்...

இறைவனுக்கும் எனக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அயராது உழைத்த அந்த பொதுச்சபை உறுப்பினர்களின் மிகப் பெறுமதியான வாக்குகளால் தலைவராக தெரிவு செய்ததற்கு முதலில் எனது நன்றிகள்.

இன்று இது பல பேருக்கு பல நம்பிக்கைகளை தந்திருக்கின்றது. பல இளைஞர், யுவதிகள் கட்சி பற்றிய அதிகமான அக்கறை கொள்ள வைத்துள்ளது. என்னுடன் போட்டியிட்ட நண்பர் எம். சுமந்திரன் சீ.யோகேஸ்வரன் ஐயாவும் இணைந்து கட்சியுனுடைய செயற்பாட்டினை இன்னும் பல வழிகளில் எமது மக்களின் உரிமைக்காக தேசிய இருப்புக்காக தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து எங்களுடைய பொறுப்போடும் கடமையுடனும் செயல்படுவோம். அந்தக் கடமையை சரியாக செய்வோம். இதற்காக பல தடவை பல ஊடகங்கள் ஊடாக எங்களுடைய ஒற்றுமையையும் பலத்தையும் தெளிவுபடுத்தியிருந்தோம்

நண்பர் சுமந்திரன்கூட பல தடவை தெளிவாக - பல இடங்களில் சொல்லியிருந்தார். ஆகவே, எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது. தமிழ் தேசியத்தின் இருப்பு சார்ந்தது. எங்களுடைய இனத்துக்கான அடிப்படை உரிமைகள் சார்ந்தது அந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் எல்லோரும் எங்கள் கடமைகளை ஒன்றாக பலப்படுத்துவோம் - என்றார். (ஐ)

## பொருளாதார...

அது 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில், இளம் வயதினரின் (15-24 வயது) வேலையின்மை விகிதம் ஏனைய வயதினரையும் விட 25.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 48.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் வேலையின்மை விகிதம் 5 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## ஊஞ்சல்...

பெற்றுள்ளது. இதில், செம்மலை கிழக்கை சேர்ந்த பிரசாத் டனிஸ் (வயது 10) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சிறுவன் வீட்டிலிருந்த ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தபோது கயிறு கழுத்தை இறுக்கியுள்ளது. இதனை அவதானித்த அவரின் உறவினர்கள் சிறுவனை மீட்டு முல்லைத்தீவு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு, சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று சிறுவனின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-10)

## இலங்கை...

இந்தக் குழுவினரே தேர்தல் பணியை ஒழுங்கமைத்து - கண்காணித்து - வழிநடத்தியிருந்தனர்.

வாக்குச் சீட்டில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சிவஞானம் சிறீதரன், ம.ஆ. சுமந்திரன் ஆகியோரின் பெயர்களுடன் சிறீதரனுக்கு ஆதரவை தெரிவித்த சீ. யோகேஸ்வரனின் பெயரும் இடம் பெற்றிருந்தது. எனினும், அவர் தனக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கட்சியினருக்கு பொதுக் கூட்டத்துக்கு முன்னராகவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், முற்பகல் 10 மணிக்கு பொதுச் சபை கூட்டம் கூடியது. தொடர்ந்து 10.30 மணியளவில் வாக்களிப்பு ஆரம்பமானது. சுமார் அரை மணி நேரம் தொடர்ந்த வாக்களிப்பை தொடர்ந்து, வாக்குகள் பிரிக்கப்பட்டு - எண்ணப்பட்டன. இதன்படி, சுமந்திரன் 137 வாக்குகளையும் சிறீதரன் 184 வாக்குகளையும் பெற்றனர். இதன் மூலம் 47 மேலதிக வாக்குகளால் சிறீதரன் எம். பி. இலங்கை தமிழரசு கட்சியின் 17ஆவது தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்டார்.

**இலங்கை தமிழரசு கட்சி**

இலங்கை தமிழரசு கட்சி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து - 1949 ஆம் ஆண்டு தந்தை செல்வா என்று அழைக்கப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 1972இல் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பவை இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி உருவானது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியதைத் தொடர்ந்து 1976இல் தமிழர் விடுதலை கூட்டணியாக மாற்றமடைந்தது.

2000ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியாகவே இலங்கை தமிழரசு கட்சி அதில் அங்கம் வகித்தது. 2004 ஆம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி விலகியதைத் தொடர்ந்து இலங்கை தமிழரசு கட்சியின் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தது. கடந்த ஆண்டு இலங்கை தமிழரசு கட்சிய தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி ரணிலுக்கு மார்ச் வரை காலக்கெடு

## மொட்டுக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஜன. 22

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதாயின் அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். இதற்காக மார்ச் மாதம் இறுதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் உறுதிப்பட அறிவிக்காதுவிடின் தனித்து வேட்பாளரை நிறுத்தவுள்ளதாக பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து சிறீலங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்தும் கட்சி மட்டத்தில் உயர்மட்ட பேச்சுகளை முன்னெடுத்து வருகிறது. தற்போது அமெரிக்காவிலுள்ள பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ மெய்நிகர் வழியாக கட்சியின் முக்கிய தலைவர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றார்.

இறுதியாக நடந்த கலந்துரையாடலின்போது ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ரணில் விக்கிரமசிங்கவின் இறுதியான அறிவிப்புக்கு மார்ச் மாதம் இறுதி வரை கால அவகாசம் வழங்குமாறு பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கும் எதிர்பார்ப்புடன் உள்ள தம்மிக பெரேரா தற்காலிகமாக பின்வாங்கியுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

மறுபுறம் இருவருமே தேர்தலில் களமிறங்காவிடின் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளரை நிறுத்த உள்ளதாகவும், இதன்போது ஷசீந்திர ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கட்சியின் உள்ளக தகவல்கள் கூறுகின்றன.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்க உத்தேச ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை உறுதி செய்யும் வகையில் அந்த கட்சியின் நிறைவேற்று குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும், ஜனாதிபதி ரணில் தான் போட்டியிடுவதை உறுதியாக தெரியப்படுத்தவில்லை. ஆகவேதான் ஜனாதிபதியின் அறிவிப்பு மார்ச் மாதம் இறுதிக்குள் கிடைக்காவிடின் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனது தீர்மானத்தை அறிவிக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# பெப். முதல் மீண்டும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜன. 22

பெப்ரவரி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

மருத்துவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்க தீர்மானித்துள்ள 35 ஆயிரம் ரூபாய் போக்குவரத்து கொடுப்பனவை தங்களுக்கும் வழங்க வேண்டும் என கோரியே அவர்கள் இந்த பணிப்புறக் கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.

சுகாதார சேவையில் உள்ள 72 தொழில்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய விசேட கூட்டத்தில் இது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பொது மருத்துவமனைகளில் தொடர்ச்சியான பணிப்புறக் கணிப்பை நடத்துவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதா கவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 5ஆண்டுகளுக்குள்...

பலஸ்தீன வெளிவிவகார மற்றும் புலம்பெயர்ந்தோர் தொடர்பான அமைச்சர் கலாநிதி ரியாட் மல்கியை ஜனாதிபதி ரணில் நேற்று சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று ஆரம்பமான ஜி -77 சர்வதேச மாநாட்டில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

காஸா போர் நெருக்கடி குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்ட இந்த சந்திப்பில், இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் பலஸ்தீனத்தில் உள்ள அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது. காஸா பகுதியில் மோதல்களை தடுத்து சமாதானத்தை நிலைநாட்ட ஐ. நா. செயலாளர் நாயகத்தின் வேலைத் திட்டத்துக்கு இலங்கை பூரண ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், 5 வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவுவதே இலங்கையின் முன்மொழிவாக இருக்கிறது. அத்துடன், பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை பாதுகாக்க வேண்டும். சுயாதீனமானதும் - சுதந்திரமானதுமான உரிமைகளைப் பறிக்க முடியாது என்ற விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். (ஐ)

## அதிக...

விடுவிக்கப்பட்ட அன்று நீர்வேலியிலுள்ள உறவினரின் வீட்டில் தங்கியுள்ளார். இந்த நிலையில், அவர் திடீர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரின் சகோதரருக்கு உறவினர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

தொடர்ந்து அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அதிகளவில் ஹெரோயின் போதைப் பொருளை நுகர்ந்தமையே மரணத்துக்கு காரணம் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அவரின் மரணம் குறித்த உடற்கூற்று பரிசோதனைகளை சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் மேற்கொண்டிருந்தார். (ஐ)

## ஈஸ்டர்...

போது இதற்கான முதல்படி எடுக்கப்படும் என்றார்.

"ஏப்ரல் 21, 2019 அன்று தேவாலயங்களில் இறந்தவர்கள் தாங்கள் நம்பிய தற்காக தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தனர். அன்று அவர்கள் கிறிஸ்துவை நம்பியதால் தேவாலயத்திற்கு வந்தனர். மற்ற புனிதர்களைப் போல கிறிஸ்துவை நேசித்ததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தனர்.

"ஒருவர் தியாகம் செய்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரே அவரை புனிதர் என்று பெயரிட முடியும். எனவே, ஈஸ்டர் ஞாயிறு பாதிக்கப்பட்டவர்களை இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி புனிதர்களாக அறிவிப்பதை முன்னோக்கி நகர்வோம்.

"கிறிஸ்தவம் என்பது தேவாலயங்களில் மத வழிபாடுகளில் ஈடுபடுவது மட்டுமல்ல. நாம் நீதிக்காக நிற்க வேண்டும். மற்றவர்களின் நீதிக்காக நாம் பேச வேண்டும். இதைத்தான் திருத்தந்தை பிரான்சிஸ் திருச்சபை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று தனது திருமறையில் நமக்குக் கற்பித்துள்ளார்" என்றும் கர்தினால் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சிறீதரன் சகல தரப்பினரையும் இணைத்து செயல்பட வேண்டும்

## சித்தார்த்தன் எம். பி. வாழ்த்து



யாழ்ப்பாணம், ஜன. 22

கட்சிகளுக்குள்ளே காணப்படும் பிளவு ஒன்றுமையை கொண்டுவராது. எனவே புதிய தலைவர் யதார்த்தமான முறையில் செயல்பட வேண்டும். அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைத்து செயல் பட வேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனுக்கு அவர் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

இலங்கை தமிழரசு கட்சி நீண்டகால பாரம்பரியம் கொண்ட, தமிழ்த் தேசியத்தின் ஆணிவேராக இருந்த கட்சியாகும். இதுவரையிலும், அந்த கட்சியின் தலைவராக பலர் செயல்பட்டுள்ளனர்.

தமிழரசு கட்சியின் வரலாற்றில் முதல் முறையாக தேர்தல் ஒன்றின் மூலம் தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவர் பதவி தேர்தலுக்கான பிரசாரத்தின் போது மன முறிவுகள் ஏற்பட்டுள்ளன. இது தமிழ் தேசிய உணர்வுகளுக்கு சிறந்த ஒன்றாக தெரியவில்லை. தமிழரசு கட்சி ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும்.

கட்சிகளுக்குள்ளே காணப்படும் பிளவு ஒன்றுமையைக் கொண்டுவராது. எனவே புதிய தலைவர் யதார்த்தமான முறையில் செயற்பட வேண்டும். அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டும்.” என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டம் 58 சர்வதேச அமைப்புகள் எதிர்ப்பு!

கொழும்பு, ஜன. 22

**உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு 58 சர்வதேச சிவில் சமூக மற்றும் மனித உரிமை குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அத்துடன், இது கருத்து சுதந்திரத்தை கடுமையாக கட்டுப்படுத்தக்கூடும் என்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.**

ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு உள்ளிட்ட 58 அமைப்புகள், உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீளப்பெறுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனைக்கு அமைய, அதனை தயாரிக்க வேண்டுமென ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு கேட்டுள்ளது.

இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம், குற்றங்கள் தொடர்பிலான எதனையும் விட விரிவான அர்த்தப்படுத்தல், சுயாதீன மேற்பார்வை இன்மை, நிறைவேற்றதிகாரத்தின் தேவைக்காக பயன்படுத்தப்படும் அபாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக அந்தக் குழு தெரிவித்துள்ளது.

பொய்யான கருத்துகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் காணப்படும் தெளிவற்ற அர்த்தப்படுத்தலின் ஊடாக ஊடக தணிக்கை அமுல்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவிற்கு சட்டமூலத்தினூடாக அதிக அதிகாரங்கள் வழங்கப்படுவதாகவும், அதனூடாக அரசியல்மயப்படுத்தல் இடம்பெறும் சாத்தியம் உள்ளது, ஒன்லைன் பயனாளர்களின் அடையாளத்தைக் கோருவதனூடாக தனியுரிமை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சாத்தியம் உள்ளது, நாட்டில் வளர்ந்து வரும் டிஜிற்றல் பொருளாதாரத்துக்கும் தொழில் வாய்ப்புகளுக்கும் இதனூடாக பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ)

# செல்வா, போராளிகளின் கனவுகளை இணைத்து முன்செல்ல வேண்டும்!

## தமிழரசு தலைவருக்கு ஜெயபாலன் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன. 22

தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவாகியுள்ள சிறீதரன் தந்தை செல்வாவும் போராளிகளும் விட்டுச்சென்ற விடுதலைக் கனவுகளை நடைமுறைச் சாத்தியமான வகையில் இணைத்து வளர்த்து முன்செல்லவேண்டும் என்று பிரபல கவிஞர் வ. அ. ச. ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத் துள்ள செய்திக் குறிப்பில்,

தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் அவர்களுக்கு என் அன்பான நல் வாழ்த்துகள்.

தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வா கட்சி கிளைகளையும் கட்சி அங்கத்தவர்களையும் கட்சியின் அடிபடை அதிகார மையமாக பலப் படுத்துவதையே தன்னுடைய அமைப்பு ரீதியான வழிகாட்டலாக விட்டுச் சென்றுள்ளார்.

கிளைகளை உயிர்ப்பித்து தமிழ் மக்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதையே புதிய தலைவர் சிறீ தரன் தனது தாரக மந்திரமாக முன்னெடுக்கவேண்டும்.

தமிழ் மண்ணுக்கு புலம்பெயர்ந்த மலையக தமிழர்களை தமிழரசு கட்சி இன்னமும் உள்வாங்கவில்லை என்பது வரலாற்றுத் தவறாகும். வட, கிழக்கு மலையக தமிழர்களை உள்வாங்கி அதிகாரத்தை பகிரும் வகையில் புலம்பெயர்ந்த மலையக மக்களுக்கான கட்சிக் கிளைகளை சிறீதரனின் தலைமை கட்டியெழுப்பவேண்டியுள்ளது.

சக தமிழ் பேசும் இனமான முஸ்லிம் மக்களுடனும் அவர்கள் தலைமையுடனும் சமூக அரசியல் ரீதியான தோழமையை கட்டியெழுப்பி முன்செல்வதே செல்வநாயகத்தின் வழியாக இருந்து.

13.4.2002ல் கையொப்பமிடபட்ட பிரபாகரன் - ரவூப் ஹக்கீம் உடன்பாடிக்கையின் அடிபடையில் தமிழ் - முஸ்லிம் மகளின் அரசியல் உறவை கட்டியெழுப்புவதும் இனவாதத்துக்கு எதிரான சிங்கள மக்களையும் அரவணைத்துச் செல்வதும் சிறீதரன் முன்னுள்ள தலையாய வரலாற்றுக் கடமையாகும்.

தோழர் சிறீதரன் தந்தை செல்வாவும் போராளிகளும் விட்டுச்சென்ற விடுதலைக் கனவுகளை நடைமுறைச் சாத்தியமான வகையில் இணைத்து வளர்த்து முன் செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## மாநகர சபை எல்லைக்குள் வாழும் பொது மக்களுக்கான விசேட அறிவித்தல்

- மாநகரசபைக்குட்பட்ட அனைத்து வரியிறுப்பாளர்களும் தங்களது திண்மக்கழிவுகளைத் தரம் பிரித்தே கையளித்தல் வேண்டும்.
- மாநகரசபை கட்டளைச்சட்டங்கள், சுற்று நிருபங்களின் கீழ் சமையலறைக் கழிவுகள் மாத்திரமே மாநகரசபையால் இலவசமாக அகற்றப்படும். ஏனைய தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் அவற்றின் அளவுகளின் அடிப்படையில் கட்டணத்துடனேயே அகற்றப்படும்.
- தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை பொதுமக்கள் காக்கைதீவு மீள்சுழற்சி மையம், கல்லுண்டாய் திண்ம கழிவு சேகரிப்பு நிலையம் மற்றும் 09 பிரட்டு மையங்களிலும் (நல்லூர். அரியாலை. பாஷையூர் குருநகர்1. குருநகர், பசார், நாவாந்துறை, வண்ணார்பண்ணை, கொழும்புத் துறை) கையளிக்க முடியும்.
- தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுகள் எக்காரணங்கள் கொண்டும். ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- நீரோடும் வெள்ளவாய்க்கால்களில் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.
- கழிவுகளை வீதிகளிலும் பொது இடங்களிலும் வெற்றுக்காணிகளிலும் முறையற்ற விதத்தில் வீசுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன், வீசுவோர் மீது தண்ட அறவீடும் எமது உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச் சூழல் பொலிசார் ஊடாக சட்ட நடவடிக்கையும் மாநகரசபையால் எடுக்கப்படும்.

**ஆணையாளர்.**
**மாநகரசபை.**
**யாழ்ப்பாணம்.**


# ஹெரோயின் சிக்கியது

கொழும்பு, ஜன. 22

எல்லே பகுதியில் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் தனியார் பயணிகள் பேருந்து சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து அநுராதபுரம் நோக்கி பய ணித்த தனியார் பயணிகள் பேருந்து ஒன்றில் இருந்தே குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த பேருந்தை சோதனையிட்ட போது, மதிய உணவுப்பொதி எனக் கூறும் சிறிய சந்தேகத் துக்கு உரிய பொதி சாரதியின் இருக்கைக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது.

குறித்த பொதியை பரிசோதித்த பொலிஸார் அதில் இருந்து 143 கிராம் ஹெராயின் போதைப் பொருளை கைப்பற்றினர். (அ)

# பொலிஸாருக்கு பயந்து ஓடியவர் ஆற்றில் விழுந்து படுகாயம்!

மட்டக்களப்பு, ஜன. 22

தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் பொலிஸாரை கண்டு ஓடியபோது ஆற்றில் விழுந்து படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்தின் ஆற்றுப்பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபர் மோட்டார் போக்குவரத்து பொலிஸார் நிற்பதைக் கண்டு நிறுத்துவார்கள் என்ற பயத்தில் வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தபோது சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஓட்டமாவடி ஆற்றில் விழுந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிச் காலிறுதியில்!

மெல்பர்ன், ஜன. 22

அவுஸ்திரேலிய ஓப்பன் சுற்றில் முதல் நிலை வீரரான நோவக் ஜொகோவிச் ஆடவர் ஒற்றையர் பிரிவில் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மெல்பர்னில் நடைபெற்ற காலிறுதி போட்டியில் அவர், 20 ஆம் நிலை வீரரான பிரான்ஸின் அட்ரியன் மன்னாரினோவை அவர் காலிறுதி ஆட்டத்தில் எதிர்த்தாடினார்.

சுமார் ஒரு மணி நேரமும், 44 நிமிடங்களும் நீடித்த இந்த ஆட்டத்தில் அவர், 6-0 6-0 6-3 என்ற செற் கணக்கில் அட்ரியன் மன்னாரினோவை படுதோல்வி அடைய செய்தார்.

இதன் மூலம் 25ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டத்துக்கான தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார் நோவக் ஜொகோவிச்.

ஐ. பி. எல். அனுசரணை உரிமையை

# ரூ. 9,610 கோடிக்கு கைப்பற்றியது டாடா!




புதுடில்லி, ஜன. 22

டாடா குழுமம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதாவது 2024-28 ஆம் ஆண்டு வரை இந்தியன் பிரீமியர் லீக் (ஐ. பி. எல்.) அனுசரணை உரிமையை பெற்றுள்ளது.

இதன்படி, 2 ஆயிரத்து 500 கோடி இந்திய ரூபாய்க்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 9 ஆயிரத்து 610 கோடி ரூபாய் பணம் கொழிக்கும் ஐ. பி. எல்லுடனான தொடர்பை டாடா புதுப்பித்துள்ளது.

இந்தியா - சீனா இடையிலான அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், 2022 ஆம் ஆண்டில் விவோவிடமிருந்து டாடா குழுமம் ஆரம்பத்தில் பெற்றது.

இந் நிலையில் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. டாடா குழுமம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் ஐ.பி.எல்லின் பிரதான அனுசரணையாளராக இருந்தது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சாத்தியமான ஏலதாரர்களுக்கு கடுமையான நிபந்தனைகளை வகுத்துள்ளது.

குறிப்பாக இந்தியா நட்புறவைப் பகிர்ந்து கொள்ளாத பிரதேசங்களிலிருந்து நிறுவனங்களைத் தவிர்த்து, விவோ போன்ற சீன நிறுவனங்களை பந்தயத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்தது.

மேலும், விளையாட்டு உடைகள், கிரிப்டோகரன்சி, பந்தயம், சூதாட்டம் மற்றும் மதுபான தயாரிப்புகளுடன் தொடர்புடைய நிறுவனங்களும் ஏலத்தில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

ஆதித்யா பிர்லா குழுமம் ஒரு முக்கிய போட்டியாளராக உருவெடுத்தது, ஜனவரி 12 காலக்கெடுவிற்குள் தனி ஏலத்தை சமர்ப்பித்தது. எனினும், பிசிசிஐ சனிக்கிழமையன்று ஐ. பி. எல்லுக்கான பிரதான அனுசரணை உரிமையை டாடா குழுமத்துக்கு ஐந்தாண்டு காலத்துக்கு வழங்கியது.

# சானியாவின் திருமணம் முறிவு; மலிக் நடிகையுடன் புதிய பந்தம்!






கராச்சி, ஜன. 22

இந்தியாவை சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவை விவாகரத்து செய்துள்ள பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் சொகைப் மாலிக், தற்போது 3ஆவதாக நடிகை ஒருவரை திருமணம் செய்துகொண்டுள்ளார்.

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையாக இருந்தவர் சானியா மிர்சா. இவரும், பாகிஸ்தான் அணியின் கிரிக்கெட் வீரர் சொகைப் மாலிக்கும் கடந்த 2010ஆம்ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு 5 வயதில் இஷான் என்ற மகன் உள்ளார்.

இந்நிலையில் இவர்கள் 2 பேருக்கும் இடையே அதிகளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகின்றனர் என்று கூறப்பட்டது. சானியா மிர்சா, ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய் நகரிலேயே தங்கியிருந்தார். அவர்களின் பிரிவுக்கான காரணம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலையில், சொகைப் மாலிக், பாகிஸ்தானை சேர்ந்த நடிகையான சனா ஜாவேத்தை திருமணம் செய்துள்ளார். கராச்சியில் இந்தத் திருமணம் எளிமையான முறையில் நடந்துள்ளது.

சொகைப் மாலிக் செய்யும் 3ஆவது திருமணமாகும் இது. அவர் முதலாவதாக ஆயிஷா சித்திகி என்பவரைத் திருமணம் செய்து 2010இல் விவாகரத்து செய்திருந்தார். அதிகாரபூர்வமாக சானியா மிர்சாவின் விவாகரத்து விஷயம் வெளியே தெரிவதற்கு முன் இத்திருமணம் நிகழ்ந்துள்ளது. எனவே, அவர் சானியா மிர்சாவை, தலாக் முறைப்படி விவாகரத்து செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் சானியா குடும்ப வட்டாரங்கள் கூறியதாவது: இஸ்லாம் மதத்தின் ஹகுலா“ வழக்கப்படி இந்த விவாகரத்து நடந்துள்ளது. ஒரு முஸ்லிம் பெண் தனது கணவரை ஒருதலைப்பட்சமாக விவாகரத்து செய்யும் உரிமைதான் ஹகுலா” என்பதாகும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட் 10 விக்கெட்களால் ஆஸி வெற்றி!

அடிலெய்ட், ஜன. 22

அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளை 10 விக்கெட்களால் அவுஸ்திரேலியா வெற்றிகொண்டது.

இந்த வெற்றிக்கான 12 ஐ. சி. சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளை அவுஸ்திரேலியா பெற்றுக்கொண்டது.

ட்ரவிஸ் ஹெட் குவித்த சதம் (119 ஓட்டங்கள்), ஜோஷ் ஹஸல்வூட்டின் 9 விக்கெட் குவியல், பட் கம்மின்ஸின் சிறப்பான பந்துவீச்சு என்பன அவுஸ்திரேலியாவுக்கு இலகுவாக வெற்றிபெற உதவின.

இந்தப் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 79 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை வீழ்த்திய ஹஸில்வூட் டெஸ்ட் போட்டி ஒன்றில் தனது அதிசிறந்த பந்து வீச்சுப் பெறுதியைப் பதிவுசெய்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் அறிமுக வீரர் ஷமர் ஜோசப் 5 விக்கெட்களை வீழ்த்தி பாராட்டைப் பெற்றார்.

ஷமர் ஜோசப் தனது முதல் பந்திலேயே அவுஸ்திரேலியாவின் புதிய ஆரம்ப வீரரும் சிரேஷ்ட வீரருமான ஸ்ரீவ் ஸ்மித்தின் விக்



கெட்டைக் கைப்பற்றி வரலாறு படைத்தார்.

துடுப்பாட்டத்திலும் ஷமர் ஜோசப் திறமையை வெளிப்படுத்தினார். கடைசி விக்கெட்டில் கெமர் ரோச்சும் ஷமர் ஜோசப்பும் 55 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டி 3ஆம் நாள் காலை முதலாவது ஆட்ட நேர பகுதியில் நிறைவுக்கு வந்தது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் பெற்ற 283 ஓட்டங்களே இந்த டெஸ்ட் போட்டியில் பெறப்பட்ட அதிகப்பட்ச இன்னிங்ஸ் எண்ணிக்கையாக இருந்தது.

2 போட்டிகள் கொண்ட தொடரில் இந்த வெற்றியுடன் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**போட்டி சுருக்கம்**

மேற்கிந்தியத்தீவுகள் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மெக்கென்ஸி 50, கெமர் ரோச் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆஸி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 283 ஓட்டங்களை பெற்றது. இதில், ட்ராவிஸ் ஹெட் 119, உஸ்மான் கவாஜா 49, நதன் லயன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் இரண்டாவது இன்னிங்ஸில் 120 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. கேர்க் மெக்கென்ஸி 26, ஜஸ்டின் கிரீவ்ஸ் 24, யொசுவா டா சில்வா 18 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

அவுஸ்திரேலியா வெற்றி இலக்கான 26 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி பெற்றது. (ஸ்ரீவ் ஸ்மித் 11 ஆ.இ., உஸ்மான் கவாஜா 9 - உபாதையால் ஒய்வு) (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் இகா அதிர்ச்சி தோல்வி!

மெல்பர்ன், ஜன. 22

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற 3 ஆவது சுற்று ஆட்டத்தில் தரவரிசையில் முதல்நிலை வீராங்கனையும் ‘4 கிராண்ட்ஸ்லாம்’ பட்டம் வென்றவருமான இகா ஸ்வியாரெக் (போலந்து) அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இகா ஸ்வியாரெக் 3 ஆவது சுற்று ஆட்டத்தில் தரவரிசையில் 50 ஆவது இடத்தில் உள்ள 19 வயது வீராங்கனையான லிண்டா நோஸ்கோவாவை (செக் குடியரசு) எதிர்கொண்டார்.

இதில் முதல் செற்றை இழந்த லிண்டா நோஸ்கோவா சரிவில் இருந்து மீண்டு அடுத்த 2 செற்களிலும் அபாரமாக செயல்பட்டு 3-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் ஸ்வியாரெக்கை வீழ்த்தி அசத்தினார்.

2 மணி நேரம் 20 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார். (ஐ)



# சர்வதேச நீதிமன்றில் தென்னாபிரிக்கா வழக்கு! போரை நிறுத்த இஸ்ரேலிடம் கோரிக்கை!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா





காசா போர்க் களத்தில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டு வருவதாக தென் ஆபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருக்கிறது.

காசாவில் ஹமாஸுக்கும் - இஸ்ரேலுக்கும் இடையேயான போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஐ.நாவின் அறிவுரைகளை ஏற்க மறுத்து இடைவிடாத தாக்குதலை பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் அதிக அளவில் கொல்லப்பட்டு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு பல்வேறு நாடுகள் கடும் கண்டங்களை பதிவு செய்து வரும் நிலையில் தென் ஆபிரிக்கா ஒரு படி மேலேபோய் இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருக்கிறது.

தென் ஆபிரிக்க அரசு இதுகுறித்து தெரிவிக்கையில், காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கைகள் இனப்படுகொலை தன்மை கொண்டவையாகும். காரணம், பாலஸ்தீன தேசத்தவர்கள் மற்றும் பாலஸ்தீனிய இனக் குழுவின் பெரும் பகுதியினரை அழிக்கும் நோக்கில் தாக்குதல் நடத்தப்படுகிறது.

பாலஸ்தீனியர்களைக் காசாவில் கொலை செய்வதும், உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கிறார்கள். அவர்களை உடல் ரீதியான பாதிக்கப்பட செய்து திட்டமிட்டு அவர்களின் வாழ்க்கை சூழலை மோசமாக்குவது சந்தேகமளிக்கிறது என்று தென் ஆபிரிக்கா அழுத்தமாக தனது எதிர்ப்பை பதிவு செய்து இருக்கிறது.

ஏற்கனவே காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் நிற வெறி தாக்குதல்களுக்கு ஈடானவை என பல நாடுகள் விமர்சித்து இருந்தன. இஸ்ரேலும், தென் ஆபிரிக்காவின் ஐநாவின் உறுப்பினர்களாக உள்ள நிலையில், தென் ஆபிரிக்க அரசு தொடர்ந்து இருக்கும் வழக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

**சர்வதேச நீதிமன்றம்**

சர்வதேச நீதிமன்றம் என்பது, ஐ.நா சபையின் நீதித்துறை சார்ந்த முதன்மை அமைப்பு ஆகும். இது நெதர்லாந்து நாட்டின் தலைநகரான ஹேக்கில் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அவையின்படி 1945 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்நீதிமன்றம் 1946 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கியது.

இது முன்னர் இயங்கிவந்த நிரந்தர சர்வதேச நீதிமன்றம் என்பதற்கான பதிலீடாகச் செயல்பட்டது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பதும் அனைத்துலக அளவிலான நீதி வழங்குதலுடன் தொடர்புடையதாகும்.

இதன் உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்படும் சட்டத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், முறையான அதிகாரம் பெற்ற அனைத்துலக அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆகியவை முன்வைக்கும் சட்டம் தொடர்பான கேள்விகள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த நீதிமன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

இதன் வரலாற்றில் மிகக் குறைந்த வழக்குகளையே கையாண்டுள்ளது எனினும், 1980 களுக்குப் பின்னர் இந்நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்வதில், வளர்ந்துவரும் நாடுகள் மத்தியில் ஆர்வம் காணப்படுகின்றது.

**தென் ஆபிரிக்க அரசின் வழக்கு**

பாலஸ்தீனர்க்கு சொந்தமான பெரும் பகுதி நிலங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்து அந்நாட்டு மக்கள், வழிபாட்டு தளங்கள் மீது பல ஆண்டுகளாக தாக்குதல்கள் நடத்தி வருவது தொடர்கதையாக இருந்து



வந்த நிலையில், கடந்த அக்டோபர் மாதம் இஸ்ரேல் மீது ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் மட்டும் இதுவரை 8,800 குழந்தைகள், 6,300 பெண்கள் உட்பட 23,672 பேர் கொல்லப்பட்டு உள்ளார்கள். 8,663 குழந்தைகள், 6,327 பெண்கள் உட்பட 56,165 பேர் படுகாயமடைந்து உள்ளார்கள். இஸ்ரேல் தரப்பில் 1,405 ஆக உயரிழந்து இருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்து உள்ளது.

காசா மீதான இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பொஸ்பரஸ் குண்டுகளை வீசியதும், மீட்பு மற்றும் நிவாரண முகாம்களை தாக்கியது, போரில் ஈடுபடாமல் பாதுகாப்புக்காக தஞ்சமடைந்த அகதிகளின் தங்கியுள்ள முகாம்களை அழித்தது, மருத்துவமனை, பள்ளிக் கூடங்கள் மீது தாக்குதல் நடத்தி நோயாளிகளை கொன்றது, குழந்தைகளை கொன்றது போன்றவை போர் குற்றங்களாக பார்க்கப்படுகின்றன.

> **பொஸ்பரஸ் குண்டுகளை வீசியதும், மீட்பு மற்றும் நிவாரண முகாம்களை தாக்கியது, தஞ்சமடைந்த அகதிகளின் முகாம்களை அழித்தது, மருத்துவமனை, பள்ளிக் கூடங்கள் மீது தாக்குதல் நடத்தி நோயாளிகளை கொன்றது, குழந்தைகளை கொன்றது போன்றவை போர் குற்றங்களாக பார்க்கப்படுகின்றன**

**சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள்**

இந்த சர்வதேச நீதிமன்றுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஐந்து நீதிபதிகள் என்ற அளவில் தேர்தல் நடைபெறும். சீனா மட்டும் சில ஆண்டுகாலத்திற்கு தன் நாட்டு நீதிபதியை இந்த குழுவில் கொண்டிருக்கவில்லை. ஐக்கிய ராச்சியம், அமெரிக்கா, பிரான்சு, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அனைத்து தடவைகளிலும், தங்கள் நாட்டு நீதிபதிகளை அனைத்துலக நீதிமன்றத்தில் நியமித்துள்ளன.

சர்வதேச நீதிமன்ற அமைப்பின் சட்டத்தின்படி, ஓர் நாட்டின் அடிப்படையில் அல்லாமல், உயர்ந்த குணங்களின் அடிப்படையில் நீதிபதி கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் பதவியில் உள்ள நீதிபதிகள் பிற இடங்களில் பணி யாற்றக் கூடாது என்பது விதி. நீதிபதி ஒருவரை நீக்க நீதிமன்றத்தின் பெரும் பான்மையினரது வாக்குகள் தேவை. வழக்கின் நிலையைப் பொருத்து, தற்காலிகமாக நீதிபதிகள் இணைந்து கொள்ளலாம். அதிகபட்சமாக, ஒரு வழக்கிற்கு பதினேழு நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியும். நீதிபதிகளின் தீர்ப்புகள் ஒரே மாதிரியோ, வேறுபட்டோ இருக்க லாம். வேறுபட்டு இருந்தால், அதிகம் பேரின் கருத்துக்கு ஏற்ப முடிவெடுக்கப் படும்.

சம அளவில் வேறுபட்ட கருத்துகள் இருந்தால், தலைவரின் முடிவே இறுதியானது. ஐநா சபையின் சட்டத்தின் 93வது வரையறைப்படி, அதன் உறுப்பினர்கள் அனைவரும் இந்த நீதிமன்றத்தின் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர். ஐநா சபையில் இல்லாத நாடுகளும் இதன் உறுப்பினர்களாக சேர விண்ணப்பிக்கலாம். சுவிட்சர்லாந்தும், நாவுருவும் ஐநா சபையில் இல்லாத போதே இதன் உறுப்பினராகச் சேர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரேல் நிராகரிப்பு**

இஸ்ரேல் அரசு இனப்படுகொலையை தொடர்ந்து செய்வதாக தென்னாபிரிக்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்ற புகாரை ஆதாரமற்றவை என்று இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இந்நிலையில் சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிரான தென்னாப்பிரிக்காவின் இனப்படுகொலை வழக்கின் இரண்டு நாள் பொது விசாரணை (11.1.2024) நடைபெற்றது.

அத்துடன் குறித்த வழக்கை கொண்டு வந்ததற்காக தென்னாபிரிக்காவை கடுமையாக சாடிய இஸ்ரேல் இந்த வழக்கை “அபத்தமானது” என்றும் இது “இரத்த அவதூறு” என்றும் கூறியுள்ளது.

காசா மீதான இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் இடைநிறுத்த வேண்டும் என்பதற்கான அவசர நடவடிக்கைகள் அவசியம் என தென்னாபிரிக்கா விடுத்துள்ள வேண்டுகோள் குறித்தே சர்வதே நீதிமன்றம் விசேடமாக ஆராயவுள்ளது குறிப்பிடத்தக்கது. அத்துடன், கொல்லப்பட்டவர்களில் 70 வீதமானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

**இஸ்ரேலின் நிறவெறி கொள்கை**

தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசா 1994 இல் முடிவடைந்த வெள்ளை சிறுபான்மை ஆட்சியால் திணிக்கப்பட்ட தனது நாட்டின் கடந்த கால நிறவெறி ஆட்சியுடன் காசா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் கொள்கைகளை ஒப்பிட்டுள்ளார்.

பல மனித உரிமை அமைப்புகள் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் கொள்கைகள் நிறவெறி என்றே கூறியுள்ளன. இஸ்ரேலிய குண்டுவீச்சு தாக்குதல்களில் கடந்த மூன்று மாதங்களாக 22,500 க்கும் அதிகமான பாலஸ்தீன மக்களைக் கொன்றதுடன் முற்றுகையிடப்பட்ட பகுதியில் பரவலான அழிவை ஏற்படுத்தியது.

காசாவில் பாலஸ்தினர்களைக் கொல்வது, அவர்களுக்கு கடுமையான உடல் மற்றும் மனத் தீங்கு விளைவிப்பது மற்றும் அவர்களின் உடல் ரீதியான அழிவைக் கொண்டு வருவதற்காக கணக்கிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை அவர்கள் மீது சுமத்துவது ஆகியவை அடங்கும்.

தென்னாபிரிக்கா காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் இனப்படுகொலை தன்மை கொண்டவை, ஏனெனில் அவை பாலஸ்தீனிய தேசிய, இன மற்றும் இனக் குழுவின் கணிசமான பகுதியை அழிக்கும் நோக்கம் கொண்டவை என்று குற்றப்பத்திரிகையில் விவரித்து உள்ளது.





# மெக்கா, மதீனாவுக்கு நிவாரணம் வழங்கிய இலங்கை முஸ்லிம்கள்!

## காயல்பட்டினம் தமிழர் என்ன செய்தார்?

யூ.எல். மப்றூக்

சவூதி அரேபியாவுக்கு இலங்கை முஸ்லிம்கள் சுமார் 80 வருடங்களுக்கு முன்னர் பஞ்ச நிவாரணமாக பணம் அனுப்பிய தகவலொன்று வெளியாகியுள்ளது. இது தொடர்பான ஆணவங்கள் சிலவற்றை - சமூக ஊடகங்களில் சிலர் வெளியிட்டமையினை அடுத்து, இவ்விடயம் பேசுபொருளாகியது. சவூதி அரேபியாவின் மெக்கா - மதீனா நகரங்களில் வசித்த அரேபியர்களுக்கு 1945 ஆம் ஆண்டு, இலங்கை முஸ்லிம்கள் மேற்படி நிதியை அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.

இரண்டாம் உலகப்போர் நடந்த காலப் பகுதியில் 1945ஆம் ஆண்டுக்கு முன்னர் ஹஜ் யாத்திரைக்காக சவூதி அரேபியாவுக்கு வெளிநாட்டவர்கள் 4, 5 வருடங்களாக செல்வது தடைப்பட்டது. இதன் காரணமாக, ஹஜ் யாத்திரிகர்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை எதிர்பார்த்து வாழ்ந்த மெக்கா மற்றும் மதீனா வாசிகள் பஞ்சத்தை எதிர்கொண்டனர்.


இந்த நிலையில்தான் கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்கள் "மெக்கா - மதீனா பஞ்ச நிவாரணக் கமிட்டி" என்ற பெயரில் குழுவொன்றை உருவாக்கி, நிவாரண நிதி சேகரிக்கத் தொடங்கியதாக, தற்போது வெளியாகியுள்ள ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

"மெக்கா - மதீனா பஞ்ச நிவாரணக் கமிட்டி" தலைவராக டாக்டர் எம்.ஸீ. எம். கலீல் செயற்பட்டுள்ளார். இவர் இலங்கை முஸ்லிம் லீக் தலைவராகவும், இலங்கை ராஜிய சபையின் உறுப்பினராவும் பதவி வகித்துள்ளார்.

பஞ்ச நிவாரணக் கமிட்டியின் செயலாளராக பீ.எஸ். அப்துல் காதிர் என்பவர் இருந்துள்ளார். இவர் இந்தியா வில் தமிழ்நாட்டில் உள்ள காயல்பட்டினத்தைச் சேர்ந்தவர். இலங்கையில் 'பல்லாக் லெப்பை' எனும் வர்த்தக நிறுவனத்தை நடத்தி வந்துள்ளார். இந்த நிறுவனம் இப்போதும் இலங்கையில் உள்ளது.

மேற்படி நிவாரணத்துக்காக கொழும்பு உட்பட 86 ஊர்களில் நிதி சேகரிக்கப்பட்டதாகவும், அந்த முயற்சியின் பயனாக 71,832 ரூபாய் 81 சதம் நிதி கிடைத்ததாகவும், அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கிடைத்த நிதியில் 50 ஆயிரம் ரூபாயை ஒரு தடவையும், பிறகு ஒரு தடவை 20 ஆயிரம் ரூபாயையும், சவூதி அரேபியாவின் அப்போதைய மன்னர் சுல்தான் அப்துல் அஸீஸ் இப்னு சௌது அவர்களுக்கு 'ஈஸ்டர்ன் பேங்' மூலமாக அனுப்பி வைத்ததாகவும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நன்றி தெரிவித்து - தந்தி மூலம் மன்னர் பதிலளித்திருந்தார் எனவும் அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சமூக ஊடகங்களில் வெளிவந்த மேற்படி ஆவணங்கள் இரண்டு பக்கங்களை உடையவை. அவற்றில் ஒரு பக்கத்தில் பஞ்ச நிவாரண குழு ஆரம்பித்து - நிதி சேகரிக்கப்பட்டு, அதனை அனுப்பி வைத்த விவரங்கள் எழுதப்பட்டுள்ளன. 30.04.1945ஆம் ஆண்டில் அந்த விவரங்கள் எழுதப்பட்டதாகவும் அந்தப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குழு சேகரித்த நிதி தொடர்பான கணக்கறிக்கை இன்னொரு பக்கத்தில் உள்ளது. அது 30.06.1945ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது.

இந்த விவரங்களை அடிப்டையாக வைத்து - இதனுடன் தொடர்பானவர்களை தேடியதில், மேற்படி பஞ்ச நிவாரண குழுவின் செயலாளராக செயற்பட்ட அப்துல் காதிர் என்பவரின் 'பல்லாக் லெப்பை' நிறுவனத்தை தற்போது நடத்தி வருபவரும் அவரின் மருமகன் (தங்கையின் மகன்) பி.ஏ. சதக் என்பவரின் மகனுமான பி.எஸ்.ஏ. றபீக் (பாளையம் சதக் அஹமட் றபீக்) என்பவரை பிபிசி தமிழ் கண்டறிந்தது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள காயல்பட்டினத்தைச் சேர்ந்த றபீக், தனது முன்னோர் கொழும்பில் ஆரம்பித்த 'பல்லாக் லெப்பை' நிறுவனத்தை நடத்தி வருகின்றார். 'மெக்கா - மதீனா பஞ்ச நிவாரண கமிட்டி'யின் செயலாளராகப் பணியாற்றிய அப்துல் காதிருடைய தந்தையின் பெயரே 'பல்லாக் லெப்பை' என றபீக் கூறுகின்றார்.



பி.ஏ. சதக்



பீ.எஸ். அப்துல் காதிர்



பி.ஏ. சதக்கின் மகன் பி.எஸ்.ஏ. றபீக்

அவருடன் பேசியதில், தனது தந்தையின் மாமாவான அப்துல் காதிர், 'மெக்கா - மதீனா பஞ்ச நிவாரண கமிட்டி' செயலாளராக பணியாற்றி, நிதி சேகரித்தமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் தற்போதும் தங்களிடம் உள்ளதாகத் தெரிவித்ததோடு, அவற்றின் பிரதிகளையும் வழங்கினார்.

இந்தியாவிவிருந்து இலங்கைக்கு - போர்த்துக்கேயர் காலத்திலேயே தமது முன்னோர் வந்துவிட்டார்கள் என றபீக் கூறுகின்றார். அந்த வகையில் தனது மூதாதையர்களில் ஒருவரான தனது தந்தையின் மாமா அப்துல் காதிர், ஒரு குறிப்புப் புத்தகத்தைப் பேணி, அதில் முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை தேதிகளுடன் எழுதி வந்துள் ளார் எனவும் றபீக் தெரிவித் தார். அந்தப் புத்தகம் தற் போது றபீக் வசம் உள்ளது.

மேற்படி குறிப்புப் புத்தகத்தின் 30 மற்றும் 31ஆவது பக்கங்களிலேயே 'மெக்கா - மதீனா பஞ்ச நிவாரண கமிட்டி' பற்றியும், அந்தக் கமிட்டி சேர்ந்த நிதி தொடர்பான வரவு - செலவு பற்றிய விடயங்களும் எழுதப்பட்டுள்ளன.

**சவூதி மன்னருக்கு அனுப்பப்பட்ட 70 ஆயிரம் ரூபாய்**

மெக்கா - மதீனாவுக்கான பஞ்ச நிவாரணமாக வசூலிக்கப்பட்ட 71,832

(16ஆம் பக்கம் பார்க்க)

ரூபா 81 சதத்தில், முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபாய் பணம் - மன்னர் இப்னு சவூது அவர்களின் பெயரில் மக்காவுக்கு 28.03.1945ஆம் ஆண்டு 'ஈஸ்டடன் பேங்' மூலம் அனுப்பப்பட்டதாக வரவு - செலவு பதிவில் குறிப்பிடப்பட்டுள் ளது. பின்னர் 01.09.1945ஆம் ஆண்டு 20 ஆயிரம் அனுப்பப்பட்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது.

மிகுதிப் பணத்தில் டி.டி கமிஷன், தந்தி, விளம்பரம், அச்சுக்கூலி, பேப்பர் கவர், தபால், சம்பளம் மற்றும் சில்லறை செலவுகளுக்காக 956 ரூபாய் 43 சதம் கொடுக்கப்பட்டடதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதியாக எஞ்சிய 876 ரூபாய் 38 சதம் பணத்தை, 'டாக்டர் கலீல் மற்றும் பெரிய தலைவைர்களுடைய சம்மதத்துடன்' இலங்கை முஸ்லிம் சகாய நிதிக்கு கொடுத்ததாக வரவு - செலவு கணக்குப் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.


மேற்படி குறிப்புப் புத்தகத்தில் - இவை தவிர்த்த வேறு பல நிகழ்வுகள் பற்றிய தகவல்களும் பதியப்பட்டுள்ளன.


எடுத்துக்காட்டாக, 1946ஆம் ஆண்டு இந்தியாவில் நேரு தலைமையிலான இடைக்கால அரசாங்கம் பதவியேற்ற போது, முஸ்லிம்கள் எடுத்த நிலைப்பாடு பற்றி - அந்த புத்தகத்தின் 33ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "1946 செப்டம்பர் 2, இன்று புது டில்லியில் பண்டித நேரு தலைமையில் இடைக் கால சர்க்கார் பதவி ஏற்றது. இன்றைய தினத்தை முஸ்லிம்கள் துக்க தினமாக கொண்டாடி, எங்கும் கறுப்புக் கொடி கட்டி, கிளர்ச்சி செய்தனர்" என எழுதப் பட்டுள்ளது.


அதே பக்கத்தில் இந்திய அரசியல் வரலாறு பற்றிய மற்றொரு தகவல் - பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது. "1946 அக்டோபர். இன்றுதான் முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் இடைக்கால சர்க்காரில் அதிகாரமேற்றனர்".

அந்தப் பக்கத்தில் இன்னுமொரு பதிவு இவ்வாறு உள்ளது, "1946 டிசம்பர் 6. தொகுதி சம்பந்தமாக காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையில் நடந்துவந்த வியாக்கியானத் தகராறை, லண்டனில் தலைவர்களை அழைத்துப் பேசி, ஜனாப் ஜின்னா சொல்வதுதான் சரியான வியாக்கியானமென்று, பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லி தீர்ப்பளித்தது இன்றுதான்".

இப்படி இந்தக் குறிப்புப் புத்தகத்தில் இந்திய அரசியல் தொடர்பாகவே கணிசமாக எழுதப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.







இலங்கையில்
முதலாவது 24 மணி நேர செய்தித் தொலைக்காட்சி

DAN news

மேல் மாகாணம் எங்கும்
27ம் திகதி முதல்

UHF

அலைவரிசையில்...
(செனல் எண் - 21)

இதுகாலவரை
தமிழில் மாத்திரம் செய்திகளை ஒளிப்பரப்பிய

DAN news

தமிழ் - சிங்கள
என்று இரண்டு மொழிகளிலும்...

DAN නිව්ස්
24X7

முதலாவது இருமொழி செனலாக ஒளிபரப்பாகவுள்ளது.